உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௯.] சித்திரபானு-௵ ஆடி ௴ [பகுதி-௯.
Vol. 39. July—August 1942. No. 9.

உள்ளுறை.

| | | |
|---|---|---|
| மதுரை இயற்றமிழ்மகாநாட்டைத்தொடங்கிவைத்த ஸேதுபதிமகாராஜாவர்கள் சொற்பொழிவு:— | | ௪௧௭—௪௩௪ |
| கம்பராமாயண சாரம்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C. | ௪௩௫—௪௪௨ |
| விஞ்ஞானவளர்ச்சி:— | ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L. | ௪௪௩—௪௫௨ |
| இராமசேயம்:— (உத்தரகாதை) | T. K. இராமானுஜையங்கார், உதவியாசிரியர் | ௪௫௩—௪௫௮ |
| அநுதாபக்குறிப்பு:— | | ௪௫௮ |
| மதிப்புரை:— | | ௪௫௯—௪௬௩ |
| தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— | | ௪௬௪ |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1942.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and
Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press,
No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | *ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி–௩௯.] சித்திரபானு-ஷு ஆடி மீ [பகுதி–௯.

Vol. 39. July—August 1942. No. 9.

மதுரைமாநகரின்கண் 1–8–'42-ல் நடந்த இயற்றமிழ்மஹாநாட்டைத் தொடங்கிவைத்தபொழுது இராமநாதபுர அரசர் மகாராஜராஜஸ்ரீ ரா. ஷண்முகராஜேசுவரஸேதுபதியவர்கள் நிகழ்த்திய

## சொற்பொழிவு

தமிழன்பர்களே!

இவ் வியற்றமிழ்மஹாநாட்டைத் திறந்துவைப்பதன்முன், இப் பணியை எனக்களித்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு யான் கருதும் சிலவற்றை ஈண்டெடுத்துரைக்க விரும்புகின்றேன்.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழி வேறொருமொழியினின்று கிளைத்ததாகாது, தனக்கேயுரிய தனிச்சொற்களும் பிற பண்புகளும் கொண்ட தனிநிலையுடையதென்பது அறிஞர் கண்ட துணிபு. "தமிழ்" என்னும் சொற்கு இனிமையென்பது பொருளென்பதும், அவ் வினிமையுடைமைபற்றியே இம்மொழி இப்பெயர்பெற்றதென்பதும் இதன்சிறப்பை நன்குவிளக்கும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோ லினிதாவ தெங்குங் காணோம்" என்பது பாரதியார்வாக்கு. இம்மொழி இப்பொழுதுவழங்கும் நிலவெல்லைக்கப்பாலும் பண்டு பரவிக்கிடந்ததென்றும், சரித்திரவாராய்ச்சிக்கெட்டாத மிக நீண்டகாலந்தொட்டுப் பரதகண்டத்தின் தென்பகுதியில் வழங்கும் பழமைவாய்ந்ததென்றும் ஆராய்ச்சியாள

கூறுகின்றனர். இவ்வாறு தோன்றுதொட்டு இன்றுவரை நின்று நிலவும் பெருமைபடைத்த இம்மொழி, இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என மூவகைப்படுத்து 'முத்தமிழ்' என்று முற்கால முதல் வழங்கப்பட்டுவருகின்றது. இங்ஙனம் வழங்கப்படுவதும், இம்மூன்றற்கும் தனித்தனியாகவன்றியும் தொகுதியாகவும் இலக்கணம் வகுக்கப்பெற்றிருப்பதும் இம்மொழிக்கே சிறப்பாக வுரியன என்பர்.

இம் மூன்றுதமிழினுள், இயற்றமிழாவது—யாவரும் தம் உள்ளக்கருத்தை வெளியிடுவதற்குக் கருவியாய், உலகவழக்கிலும் நூல்வழக்கிலும் வசனமும் செய்யுளுமாய் இயலும் தமிழாம். அவ் வியற்றமிழ் இசையோடுகூட்டித் தாளமறுத்துப் பாடப்படும்வழி இசைத்தமிழாம். அவ் விசை தாளங்களோடு அபிநயமும் கூடிய வழி நாடகத்தமிழாம்.

இயற்றமிழ் மனத்தைப்பற்றியது. இசை அதனுடன் இன் ஞேசை தழுவியது. நாடகம் அவற்றுடன் மெய்யினியக்கம் கூடியது என்பர் ஆன்ருேர். எனவே, இயற்றமிழ் காணங்கள் மூன்றனுள் முதலாவதான மனத்தை முக்கியமாகப் பற்றிய தென்பது புலனும். இவ்வாற்ருல், இயற்றமிழ் முன்னேதோன்றிய தாவதோடு ஏனை யிரண்டுதமிழுக்கும் அடிப்படையாயும்நிற்றல் உணரப்படும். இக்காரணம்பற்றியே முத்தமிழுள் இது முன்னிற்ப தாயிற்று என்பர்.

மனவுணர்ச்சியின் சிறப்பும், உணர்ந்ததைச்சொல்லால் உணர்த் தும் வன்மையும் மக்கட்பிறவிக்கு ஏனையவற்றினும் ஏற்றம் தருவன வாம். அங்ஙனம் உணர்தற்கும் உணர்ந்ததைப் பிறருக்கு உணர்த்து தற்கும் கருவி மொழியாகும். சமூகவாழ்க்கையையுடைய மக் கட்கு மொழி எத்துணை அவசியமானதென்பதும் அம்மொழியால் அவரடையும் பயனும் இங்கு அதிகமாக யான் விரித்துரைத்தல் வேண்டுவனவல்ல. நம்மொழியில் அங்ஙிலையில் நிற்பது இயற்றமி ழாதல் வெள்ளிடைமலே. இவ்வியற்றமிழ், இசைநாடகங்களிற் கலத்தல் மேலே கூறப்பட்டது. இசைத்தமிழில்வரும் பாட்டும்

நாடகத்தமிழில்வரும் பாட்டும் உரையும் இயற்றமிழ்ச்சொற் கொண்டேயாதலின் அங்ஙனம் கூறப்படுவதாயிற்று. எனவே அவ் விசை நாடகங்களுக்குக் கவிசெய்வோன் அவ்விரண்டு தமிழுடன் இயற்றமிழும் வல்லானாக இருத்தல்வேண்டும். அன்றியும், அவ் விசை நாடகத் தமிழ் கூறும் நூல்களும் இயற்றமிழே. அப்பெயர்க ளும் இயற்றமிழேயாம். மற்றும், தமிழென்பது பொதுவாக மூன்றுதமிழையும் அடக்கிநிற்பினும் சிறப்பாக இயற்றமிழையே குறித்துநிற்கும். இவ்வாற்றால் இயற்றமிழ் ஏனை யிரண்டுதமிழி னும் சிறந்து தனித்தும் அவற்றில் உயிரேபோலக் கலந்தும் நிற்குந்தன்மையையுடையது என்பதை உணரலாம்.

இவ் வியற்றமிழ், எழுத்தும் சொல்லும் பொருளுமென்று மூன்றுபகுதிகளை யுடையது. இம் மூன்றிலக்கணத்தோடு யாப் பிலக்கணத்தை வேறாகக்கூட்டி நான்கென்றும் அணியிலக் கணத்தை யவ்வாறுகூட்டி ஐந்தென்றும் வழங்குவதும் உண்டு. சங்ககாலத்தும் அதனையடுத்தும் பிற்காலத்தும் தோன்றிய தொல் காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணங்களும் எட்டுத்தொகை முதலியனவும் ஐம்பெருங்காப்பியங்களும் கம்பராமாயணம் முதலி யனவும் பலவகைப் பிரபந்தங்களும் பல்வேறு உரைநடைகளும் அவைபோன்ற பிறவும் இவ் வியற்றமிழ்நூல்களாம்.

இனி, இவ் வியற்றமிழ் பண்டு பலதுறைகளிலும் வளர்க்கப் பட்டு உயர்நிலையெய்தியிருந்தவாறும் இப்பொழுது அதன்வளர்ச்சி குறித்து நாம் செய்யவேண்டுவனவும் ஒருவாறு கூறப்படும். அதனை வளர்த்தற்குரிய நெறிகளை ஆராய்வதே இம் மஹாநாட்டின் நோக்க மாகும். அவ்வழி, முன்னர்நிலைமையைச் சிறிது மொழிதல் முறைமையேயாம். ஏனெனில், 'மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை'* ஆயினும், முன்னேற்றங் கருதி முயலுங்கால் முன்னிலையை யறிந்துகொள்ளுதல் அம்முன் னேற்றத்துக்குத் துணையாமாதலின், அப்பொழுது அதனைப் பேசுதல் பழங்கதைபேசுதலாய்க் குறையாகாதாதலால் என்க.

---

* பாரதியார்

பண்டைக்காலத்தில் நம் தமிழகத்தில் வாழ்ந்த பல்வேறு பாவலரும் காவலரும் யாவரும் இத்தமிழ்வளர்ச்சிக்காகப் பெருந் தொண்டுசெய்து பெயர்பொறித்துவைத்திருக்கின்றனர்.

செந்தமிழ்முனிவன் என்று சிறப்பிக்கப்பெற்ற அகத்தியன் சிவபெருமானிடத்துத் தமிழ்கற்றுத் தென்னாடுவந்தான் என்னுஞ் செய்தி அறிஞரனைவரும் அறிந்தது. வேறு பிறரிடம் அவன் தமிழ் கற்றானென்று கூறுவாரும் உளராயினும், அதுபற்றிய ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டாததே. அவன் தமிழ்கற்றுத் தென்னாட்டில் பொதியின்மலையிலிருந்து தமிழிலக்கணஞ்செய்ததில் மதபேத மில்லை. அவன்வருகைக்குமுன்பே தென்னாட்டில் தமிழ் சிறந் திருந்ததென்றும், பின் அவன் அந்நிலத்து உலகவழக்கையும் நூல்வழக்கையும் ஆராய்ந்து புத்திலக்கணம் வகுத்தான் என்றும் ஆன்றோர் கூறுவர்.

ஒரு மொழியின் வளர்ச்சி அம்மொழிவழங்கும்நிலத்து மக்க ளின் நாகரிகவளர்ச்சியை நன்குகாட்டும். ஏனெனில், நாகரிக வளர்ச்சியுடைய மக்கள்மொழியே நன்குவளர்ந்திருக்குமாதலால் என்க. அகத்தியன் தமிழ்நிலத்தின் இருவகைவழக்கையும் ஆராய்ந்து நூலியற்றினன் என்றதனால் அவ் வகத்தியன்வருகைக்கு முன்னதாகிய பழமைமிக்ககாலத்திலேயே தமிழ்மக்கள் நாகரிக வளர்ச்சியுடையவராய்த் தம்மொழியை இருவழக்கினும் நன்கு வளர்த்துவந்திருக்கின்றனரென்பது புலனாம். இங்ஙனமாகவே நாம் நம்மொழியாகிய இம்மொழியை இன்று குன்றவிடுவோ மாயின், அது நமது நாகரிகம் குன்றியநிலையையே தெளிவாக விளக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமுண்டோ? அகத்தியமுனிவன் தனக்கு முன்புள்ள உலகவழக்கையும் நூல் வழக்கையும் ஆராய்ந்து, இரண்டன் அமைதிகளும் தழுவி இலக் கணம்வகுத்தான் என்றதனாலும், தொல்காப்பியன் முதலிய பிறரும் இவ்வாறே வகுத்தனர் என்பதனாலும் இருவகைவழக்கை யும் தழுவிக் குறைவின்றி மொழியை வளர்த்தல்வேண்டும் என் பதனை உணரலாம். நூல்வழக்கொன்றையே கருதினும், உலக வழக்கொன்றையே தழுவினும் மொழி வளர்ச்சியடையாது. நூல்

வழக்கிலின்றி உலகவழக்களவேயொழிந்த மொழிகளும் அவற்றிற்கு மாறுக உலகவழக்கிலொழிந்து நூல்வழக்களவேநின்ற மொழிகளும் உண்மை அறிஞர்பலரும் அறிந்ததே.

இன்னும், இவ்வகத்தியமுனிவன் இலக்கணநூலோடு மருத்துவம் முதலிய பிறவகையான பலநூல்களும் இயற்றினன் என்றும், தொல்காப்பியன் முதலான மாணவர்களுக்குத் தமிழ்கற்பித்தானென்றும், சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தான் என்றும் கூறுகின்றனர். தாம் வல்ல துறைகளிலெல்லாம் நூலியற்றுதல் மாணவர்க்குக் கற்பித்தல் புலவர்குழுவிடையிருந்து மொழிவளர்ச்சிக்குரியவற்றை ஆராய்தல் ஆகியவையெல்லாம் மொழிவளர்க்கும் முறைகளாமன்றே?

அகத்தியமுனிவனிடத்தில் இயற்றமிழுணர்ந்த மாணக்கர் தொல்காப்பியன் முதலிய பன்னிருவர் என்பர். அவர்கள் தாம் தமிழ்கற்றவளவில் நின்றுவிடாமல், தனித்தனியாகவும் சேர்ந்தும் இலக்கணங்கள்செய்து தமிழ்த்தொண்டாற்றினர் என்றும் கூறுவர். தமிழ்கற்றுத் தேர்ச்சிபெறுவார் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற தமிழ்ப்பணிசெய்தல்வேண்டுமென்பதை இதனால் அறியலாம்.

தமிழகம், பண்டு சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தரது ஆட்சிக்குட்பட்டதென்பது நம்மவர் நன்கறிந்தது. அவருள், பாண்டியமன்னர் தம்நாட்டில் மூன்று சங்கங்களமைத்துப் புலவர்களை ஒருங்குகூட்டித் தமிழாராய்வித்து அதனைப் போற்றிவளர்த்ததும் அறிஞர் பலரும் அறிந்ததே. அச்சங்கங்களுள் முதலாவதுசங்கம், பாண்டியநாட்டின் தென்பாகத்திற் கடல்கொள்ளப்பட்ட பகுதியிலிருந்த தென்மதுரையிலிருந்ததென்றும், அகத்தியன் முதலிய பல புலவர்கள் அச்சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தனரென்றும், இரண்டாவதுசங்கம், பின்னர் அந்நாட்டின் தலைநகரமாகிய கபாடபுரத்திலிருந்ததென்றும், அகத்தியன் தொல்காப்பியன் முதலிய பல புலவர்கள் அதன்கண் இருந்து தமிழாராய்ந்தனரென்றும் முதலிருசங்கவரலாறுகள் கூறப்படுகின்றன. முடத்திருமாறன் என்னும் பாண்டியன் தன்நாட்டின் தென்பாலுள்ள

பகுதியைக் கடல்கொள்ள அந்நாட்டின் வடபாலுள்ள உத்தர மதுரையில் மூன்ரும் சங்கத்தை நிறுவினன் என அச்சங்கவரலாறு வருகின்றது. இம்மூன்று சங்கங்களேயும் போற்றிய பாண்டியமன்ன ருட் கவியரங்கேறியவர்களும் பலர் உளரென்று அறிகின்ரும்.

இங்ஙனம் பெருஞ்சங்கங்களமைத்துப் பல இடங்களிலுமுள்ள புலவர் பலரையும் ஒருவழியழைத்துப் பரம்பரையாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டுவந்த இப் பாண்டியரது தாய்மொழிப்பற் றும் இடையீடுகளால் தடைபட்டு உடையாத உள்ளமும் நம்ம னோர் குறிக்கொண்டு போற்றத்தக்கனவாம். இரண்டாவதுசங்கம் கடல்கோளால் அழியவும் அதனை ஆதரித்த வேந்தன், தன்விடா முயற்சியால் உடனே உத்தரமதுரையில் மூன்ருவது சங்கம் அமைத்து அப்புலவர்களை மீண்டும் ஒருவழிக்கூட்டி முன்னர்ப் புலவர் பலர் செய்தனவாகிய தமிழணங்கின் அணிகலன்கள் பல அழியாமற்காத்ததோடு, பின்னரும் அவர்கள் தம் பணியை விடாது செய்யுமாறு செய்தானென்பதை உன்னுவோமாயின் நம் உள்ளங் கிளர்ந்தெழாது ஒடுங்கிக்கிடத்தற்கும் இடனுண்டோ? இம் மூன் ருஞ்சங்கத்திற்கு உறைவிடமாகிய இப் பாண்டியர் தலைநகரம் தமிழ் வளர்ச்சிகருதி இத்தகைய மஹாநாடுகள் நடைபெறுதற்குப் பெரி தும் பொருத்தமுடைத்தாகும்.

சங்கமமைத்துத் தமிழ்வளர்த்த பாண்டியமன்னருட் பலர் புலவர்களைப் போற்றியதோடு தாமும் கவியரங்கேறியவராக இருந் தனரென்பது அவருடைய தமிழார்வத்தையறிதற்குச் சிறந்த சான்ருகும். பிற புரவலரிடையும் இத்தகைய பெருமக்கள் பல ருளர். புகழின்பொருட்டுப் பொருள்கொடுத்து இரந்துசென்ற புலவர்களைப்புரந்துநிற்குமளவே புரவலர்கடன் என்பதின்று. அவர் புலவராகவுமிருப்பின், அது பொன்மலர் நாற்றமுடைத்தாதல் போலுமன்ரே! அங்ஙனமாயின் இவர் புலவரது அருமையறிந்து போற்றுவதோடு அப்புலவருள் ஒருவராகவுமிருந்து இவ்விருவகை யாலும் தமிழ்ப்பணிபுரிவர். இவ்வாற்ருல் இவர் பிறபுலவரினும் போற்றற்குரியவராகின்றனர். எனவே, தமிழ்கற்றலும் நூலியற்ற லும், அன்னபிறவும் பிறர்க்கே யுரியனவென்று செல்வர்நினைத்தற் கிடமில்லையென்க.

பாண்டியரமைத்த மூன்று சங்கங்களன்றியும் பிறநாடுகளிலும் பலசங்கங்கள் இருந்தனவென்றும், மேற்கூறிய சங்ககாலத்துக்குப் பின்னும் பற்பல சங்கங்கள் தோன்றியிருந்தனவென்றும், பொதியின்மலையின்கண், அகத்தியர்சங்கமொன்றிருந்ததுஎன்றும், மூன்று தமிழுக்கும் தனித்தனியான சங்கங்கள் இம்மதுரையிலிருந்தனவென்றும் தமிழறிஞர் கூறுவர்.

இங்ஙனம் பலபலசங்கங்கள் ஆங்காங்கமைந்து தமிழ்வளர்த்தது கருதத்தக்கது. இவ்வாறே பலஇடங்களிலும் தமிழ்வளர்க்குங்கழகங்கள் அமைதல்வேண்டும். ஊர்தோறும் தமிழ்க்கல்வி பெருகுதற்குரிய கழகங்களிருத்தலும் உசிதமாகும். "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச்செய்வீர்" என்றார் பாரதியாரும். முத்தமிழுக்கும் தனித்தனியாகச் சங்கங்கள் இருந்தனவென்றதனால் தமிழின் ஒவ்வொருபகுதியும் தனித்தனியே சிறப்பாக ஆராயப்பட்டது விளங்கும். இவ்வாறமையப்பெற்ற இம்மதுரையில் நடைபெறும் இம்முத்தமிழ்மஹாநாட்டில் ஒவ்வொருதமிழும் ஒவ்வொருநாளில் இப்போது சிறப்பாக ஆராயப்படுவது ஏற்புடையதே.

மேற்கூறிய சங்கங்களில் அரசர்கள் புலவர்களை ஒருங்குகூட்டித் தமிழாராய்வித்து நூலியற்றும்படிசெய்ததுடன், நூல்தொகுப்பித்தும் செய்தன அழியாமற் பாதுகாத்தனர் என்றும், அங்ஙனம் தொகுக்கப்பெற்றன தொகைநூல்களாமென்றும் கூறுவர். இவை பண்டைப்புலவர்பாடல்களில் இறந்தன ஒழிய எஞ்சியவற்றையும் பிறபுலவர்பாடல்களையும் இறவாமற் பாதுகாத்தற்பொருட்டுத் தொகுக்கப்பெற்ற நூல்களாம். இங்ஙனம் போற்றப்பட்டு இன்று நமக்குக்கிடைக்கப்பெற்றிருப்பனவன்றிப் பல பழந்தமிழ்நூல்களும் தனிப்பாக்களும் உரைகளும் இறந்தொழிந்தன என்று கேட்கின்றோம். இது பெரிதும் வருத்தத்தைத் தருகின்றது. இங்ஙனம் இறந்தொழியாமற் காத்தற்கு இந்நாளிற் பலவசதிகள் உள்ளன. அன்பர்களுடைய அரியமுயற்சியால் அநேகநூல்கள் அழியாமற் காக்கப்பெற்றிருக்கின்றன. நூல்கள்பல வெளிவராமலே இறந்தொழிதல் முதலிய குறையொன்றும் நேராமல், தமிழைக் காக்கும்

பணி அதிகமாகப் பெருகுதல்வேண்டும். இவ்வாற்ருல் தமிழ்நூல்கள் என்றும் பொன்ருதுநின்று இன்பமூட்டுவனவாகுக.

இச்சங்கங்கள் புலவர்கள் செய்தநூல்களை அரங்கேற்றுமிடங்களாகவுமிருந்தனவென் றறிகிருேம். தொல்காப்பியம் நிலந்தருதிருவிற்பாண்டியன் மாகீர்த்தியின் அவையகத்து அதங்கோட்டாசானுடையதடைகட்கு விடைகூறியபின் அரங்கேற்றப்பட்டதென்பர். பின்னும் இத்தகைய வரலாறுகள் பல கேட்கப்படுகின்றன. எனவே நூலரங்கேற்றுதலென்பது சங்ககாலத்தும் பிற்காலத்தும் நம்நாட்டில் வழக்கமாயிருந்ததென்று அறியலாம். இம்முறையிருக்குமாயின், புலமையில்லாதவரும் தம் அறிவிற்கேற்ற நூல்களை இயற்றி வெளியிட்டுப் புலவரெனத் தம்மைச் சேர்ந்தார்சிலர் புகழத் திரிதல் இயலாது. ஒருவர்செய்ததொன்றை ஒரு புலவர் குழுவைக்கொண்டு வழுவின்மைகண்டு அங்கீகரிக்கச்செய்து பின் உலகிடைப்பரப்பும் அம்முறை இக்காலத்தும் ஏற்றவற்றிற் கொள்ளத்தக்கது. முக்கியமாகப் புதியசொற்களைப்படைத்தல்போன்ற துறைகளில் இது வேண்டற்பாற்று என்று கருதுகிறேன். தமிழில் நூதனமாக எழுதப்படும் மேல்நாட்டுக்கலைகளுக்குரிய சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களை ஆக்குவோருள், ஒரொற்றுமையின்றி ஒரொருவர் ஒரொருவிதமாக ஆக்குகின்றனர். இவை ஒரு அங்கீகரிப்புச்சங்கத்தாரால் ஆராய்ந்து அங்கீகரிக்கப்படுமாயின், தமிழமைதிக்கேலாதனவாய் அவரவர்க்குத் தோன்றியவாறே ஆக்கப்படும் சொற்கள் புகுதற் கிடமிராது. பொருளுக்கியையாதனவும் புகுதாமாட்டா. பிற வழுக்களும் நீங்கும். தமிழ்மொழி அலைவில்லாத பல புதியசொற்களால் தூய்மைகெடாது வளம்பெற்ருேங்கிநிற்கும்.

தமிழ்நாட்டுப் பிறவேந்தராகிய சேரரும் சோழரும் இப்பாண்டியர் சங்கத்திற்கு ஆதரவுகாட்டிவந்திருக்கின்றனர் என்றும், அவர்கள் இச்சங்கத்துச் சான்ருேர்களைப் பெரிதும்போற்றி இவர்களைக் கொண்டு தமிழ்ப்பணிகள் செய்வித்திருக்கின்றனரென்றும் தமிழறிஞர் கூறுவர். அங்ஙனமே பிற குறுநிலமன்னரும் அவர் போன்றபிறரும் இச்சங்கத்துச் சான்ருேர்களைத் தம் உயிரினும்

சிறக்கநேசித்து அவர்கள் பொருட்குறையால் இடர்ப்படாமல் ஆதரித்தனர் என்பர். ஒருகாலத்திற் பாண்டியநாட்டிற் பஞ்சம்தோன்ற அக்காலமுழுதும் இச்சங்கப்புலவர்களை ஆலஞ்சேரி அயிந்தன் என்பானொருவன் ஆதரித்தான் என்றும் அறிகின்றோம். இவ்வாறு பாண்டியர்சங்கம் எல்லாராலும் ஆதரிக்கப்பெற்றுத் தமிழகமுழுமைக்கும் பொதுமையில்நின்ற ஒரு பெருங்கழகமாம் என்று அறிஞர் துணிகின்றனர். இவ்வாற்றால் தமிழ்வளர்ச்சியில் தமிழகத்தினரிடைநிலவிய ஒற்றுமையை உணரலாம். இங்குத் தமிழன்பர்களுக்கு ஒன்று சொல்லவிரும்புகிறேன்.

மூன்றுஞ்சங்கமிருந்து தமிழ்வளர்த்த இம்மதுரையம்பதியில் என்குலத்தவரும் உறவினரும் இருபெருஞ்செல்வமும்வாய்ந்த ஒருபெருங்குரிசிலுமான உக்கிரபாண்டியன் என்னும் இயற்பெயர் பூண்ட பொ. பாண்டித்துரைத்தேவரவர்களால் நிறுவப்பெற்றுப் பல ஆண்டுகளாகப் பலதுறைகளிலும் தமிழ்வளர்த்துவரும் சங்கத்தைப் பலரும் அறிவர். தமிழ்ச்சுவையறிவார் தொகை அருகவும், அம்மொழியில் இன்னது உள்ளது என்று அறிந்தார்சிலர் எடுத்துரைப்பினும் கேட்பதற்கு மனமிலராய்த் தமிழையும் தமிழ் கற்போரையும் கண்டாற் சிறுநோக்கு நோக்கும் செருக்கினர் தொகை பெருகவும், தமிழணங்கு பெரும்பாலோராற் பேணற்பாடொழிந்து குன்றத்தலைப்பட்டநிலையில் இச்சங்கம் தோன்றியதென்று பெரியோர் கூறுவர். இத்தன்மையான காலத்தில் தண்டமிழ்வாணரைக் கௌரவித்து அவர்களை ஆதரித்துத் தமிழின் உயர்நிலைவிளங்க அதனை வளர்த்துத் தமிழ்க்கல்வியைப் பலரிடைப் பரப்புதற்கு இச்சங்கம் நிறுவப்பெற்றது. அதுமுதல் இது செய்துவந்திருக்கும் அரும்பெரும்பணிகள் போற்றற்குரியனவாம். இச்சங்கத்தின்மூலம் தமிழ்க்கல்விகற்றுத் தேர்ச்சிபெற்றோர் பலராவர். சங்கத்திலேயேதங்கிப் போஷணைக்காகப் பொருளும் தரப்பெற்றுத் தமிழ்பயின்றும், பிறவாறு அதனைப் பயின்றும் இச்சங்கத்தார் நடத்தும் பரீக்ஷைகளில் தேர்ச்சிபெற்று விசேடமான யோக்கியதையையடைந்த பண்டிதர் பலர் தமிழ்நாடுமுழுதும் ஆங்காங்கிருந்து கொண்டு தம்மாலியன்றவகையில் தமிழ்த்தொண்டாற்றிவருகின்றனர். சிறந்த தமிழ்ப்புலவர்களை இது ஆதரித்துவந்திருக்கிறது.

இதிலிருந்து வெளிவந்த ஆராய்ச்சியுரைகளும் அன்னபிறவும் தமி ழன்பரை மகிழ்வித்துள்ளன. இவைபோன்ற தமிழ்வளர்ச்சிக் குரிய பலதுறைகளிலும் இச்சங்கம் ஈடுபட்டுவருகின்றது. அவை யெல்லாம் யான் இங்கு விரித்துரைக்கவேண்டுவனவல்ல. தமி ழன்பர்கள் அதற்கு ஆதரவுகாட்டவேண்டுமென்பதே யான் சொல் லக்கருதியதாகும்.

சென்ற ஆண்டில் இந்நகரின்கண் "தமிழிலக்கியமஹாநாடு" சிறப்பாக நடைபெற்றது. இவ்வாண்டில் இம்மஹாநாடு மிகவும் சிறப்பாக நடத்தப்படுகின்றது. இவை தமிழ்வளர்ச்சிக்கு வேண்டற் பாலனவே. இவை தமிழன்பர்களுக்கு உவகையூட்டுமென்பதில் ஐயமில்லை.

முற்கூறிய சங்கப்புலவர்கள் எல்லாநற்குணங்களும் நிறைந்து சான்றோர் என்று சிறப்பித்துச்சொல்லப்படுகின்றனர். அவர்கள் சங்கத்திருந்து தமிழாராய்ந்தது பொருளீட்டல் கருதியன்று. வள்ளல்களாயுள்ளவர்கள் இவர்கள் பொருட்குறையால் மெலியாது கவனித்துக்கொண்டனர். இவருள் ஜீவனோபாயமாகப் பிறதொழிலை மேற்கொண்டவரும் உளர். இப்புலவர்கள் தந்நலங்கருதாது தமிழ்ப் பணியில் ஈடுபட்டு வாழ்க்கையை நடத்திவந்தனர். இங்ஙனம் வாழ்ந்து உரைகளும் செய்யுள்களும் பல இயற்றினர். தம் மதி நுட்பத்தாலும் நூலறிவாலும் புரவலர்களுக்குச் சூழ்ச்சித்துணைவ ராயும் அவர்வினை முடிப்பவராயும் ஆருயிர்த்தோழராயுமிருந்து அப்போதப்போது அவர்கட்கு இனிய அறிவுரைகளைவழங்கி மகிழ் வித்துவந்தனர். பொருள்களின் இயற்கையைத் தம்முடைய கூர்த்த மதியால் உற்றுநோக்கியுணர்ந்து நூல்கள்செய்தனர். தம் குழு விடை ஒருவர்க்கொருவர் இகலில்லாது வாழ்ந்தனர். இங்ஙனமே பலவகையிலும் மேம்பட்டவர்கள் என்று இவர்கள் கூறப்படுகின்ற னர். இத்தகைய உயர்ந்தநிலையில் நின்ற சிறந்த புலவர்களைத் தன் பணிசெய்யும் மக்களாகப்பெற்ற தமிழ்மொழி எத்துணைவளம் படைத்திருக்குமென அறிஞர் உன்னியுணரலாம்.

இன்றும் இத்தன்மைவாய்ந்த புலவர்களின்தொகை பெருகு தல்வேண்டும். பொருள்நலம்படைத்தோரும் அரசாங்கத்தாரும்

பிறரும் அப்புலவர்களைப் போற்றுதல்வேண்டும். தமிழ்கற்றோர் நிலையைப் பலவழிகளிலும் உயர்த்தி ஆதரித்தலே அம்மொழியைக் கற்போர்தொகை பெருகுவதற்குச் சிறந்த துணையாகும்.

புலவர்க்கும் புரவலர்க்குமிடையே ஒற்றுமையுணர்ச்சியுண்டாதல்வேண்டும். அப்பொழுதுதான் மொழி நன்குவளரும். களவழி நாற்பது என்னும் நூலை இயற்றித் தம்மைமிகவும்நேசித்து ஆதரித்த சேரமான் கணைக்காலிரும்பொறையென்னும் அரசனைச் சோழன் செங்கணானுடைய சிறையிலிருந்து விடுவித்தார் பொய்கையார் என்னும் ஒருபுலவர் என்றும், மோசிகீரனார் என்னும் புலவர் மிகவும் புனிதமுடையதாகக் கருதப்படுவதான முரசுகட்டிலின்மேல், அறியாது, வழிநடந்துவந்த களைப்பால் உறங்கியபோது அவரை அறிந்து அப்பிழையைப் பொறுத்து அவர் எழுமளவும் களைப்புத்தீரக் கவரிகொண்டு வீசிநின்றான் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னும் ஒரு வேந்தன் என்றும், அதிகமான் நெடுமானஞ்சியென்னும் வள்ளல், தான் அரிதிற்பெற்ற அமிழ்தாய நெல்லிக்கனியை ஔவையிடம்கொடுத்து மகிழ்ந்தான் என்றும் தமிழ்கற்றோர் கூறுவர். கோப்பெருஞ்சோழன்—பிசிராந்தையார் இவரிடையிருந்த நட்பின்திறத்தை நாம் கேட்டிருக்கிறோம். இங்ஙனம் புலவரும் புரவலரும் ஒருவர்க்கொருவர் அன்பும் மதிப்பும் கொண்டு பண்டு வாழ்ந்தனரென்பர். இந்நிலை தமிழ்வளர்ச்சிக்குப் பெருந்துணையாகுமன்றோ?

இப்புலவர்கள் ஒரேகுலத்தினரல்லர்: ஒரேசமயத்தினரல்லர்: ஒரேபாலினரல்லர். மற்றும் பலவகையாலும் பலவேறு வகைப்பட்டவர் என்பர். இங்ஙனம் வேறுபட்டாராயினும், ஒருங்குகூடித் தமிழ்த்தொண்டுபுரிவதில் வேறுபடாதுநின்றது நோக்கத்தக்கது. வருணம் முதலியவற்றால் வேறுபட்டவராயினும் தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட காரணத்தால் ஒன்றுபட்டவராவரன்றோ? தமிழ்பேசும் மக்கள் எவ்வெவ்வாறு வேறுபட்டுநிற்பினும் அம்மொழியிடத்து அனைவர்க்கும் உரிமையுண்டன்றோ? மக்களிடையுள்ள பிறவேற்றுமைகள், அவர்களுக்குப் பொதுவாயுரியதொன்றன் வளர்ச்சிக்குத் தடையாமாயின், அம்மக்களும் அவர் உரிமையும்

குன்றுதல் கூறவேண்டாததே. எங்கும் வேறுபாடுகள் எவ்வித மாகவாயினும் இருத்தல் இயல்பு. அவ்வேறுபாடுகளால் ஒன்றிய நிலையை மக்கள் மறத்தலாகாதன்றோ? ஆகவே இங்ஙனம் வேறு பட்ட மக்கள் யாவரும் தமிழ்வளர்ச்சியில் ஒன்றுபட்டுநின்றது போற்றத்தகும். இப்புலவர்களை யாதரித்தும் நூல்களையும் உரை களையும் இயற்றுவித்தும் பலவாறு தமிழுக்கு உழைத்துவந்த புரவலர்களும் அங்ஙனமே குலம் முதலியவற்றால் வேறுபட்டன ராயினும், தமிழ்ப்பணியில் ஒன்றுபட்டுநின்றவராதலும் குறிக்கத் தக்கது. பிற்காலத்திலும் இவ்வாறே யாவரும் தமிழ்த்தொண்டில் ஈடுபட்டுள்ளனர்.

சங்ககாலத்திற்குப்பின் பல பேரரசரும் சிற்றரசரும் மடாதி பதிகளும் திருவின்மிக்க பெருமக்கள் பிறரும் பலவேறுபுலவர்களும் இத்தமிழ்வளர்ச்சியில் ஈடுபட்டவராவர். சங்கத்துச் சான்றோரிடத் தும் அவரை ஆதரித்துத் தண்டமிழ்புரந்தோரிடத்தும் காணப் பட்ட அரும்பெரும் பண்புகள் பல இவர்களிடத்தும் காணப்படும். தமிழகமுழுதும் தன்புகழ்பரப்பிக் கவிச்சக்கரவர்த்தியென்று கொண்டாடப்படும் மஹாகவியாகிய கம்பனும் ஒட்டக்கூத்தன் முதலிய பல உயர்பெரும்புலவர்களும் தம்முன்னோர் நூல்களெல் லாம் ஆராய்ந்துணர்ந்த நூலறிவாலும் தம் மதிநுட்பத்தாலும் புதியதுபுனையுமாற்றலாலும் பெரியவும் சிறியவுமான பல நூல்களும் உரைகளும் இயற்றித் தமிழை வளம்படுத்தியிருப்பதுபற்றி விரித் துரைத்தல் வேண்டியதின்று. வெண்ணெய்ச்சடையன்போன்ற வள்ளல்களுடைய தமிழார்வமும் தமிழ்ப்பணிகளும் நாம் மறக்கற் பாலனவல்ல. பலவழிகளிலும் தமிழ்நலங்கருதிப் பாடுபட்டுவந்த செல்வச்செழுந்தகையார்மாலையில் திகழ்ந்து தமிழ்ப்பணிபுரிவதிற் பேரார்வங்கொண்டு இயன்றமட்டில் கடமையைச் செய்துவந்த தோர் பாம்பரையில் யான் தோன்றியது எனக்குப் பேருவகை யளிப்பதாகின்றது. அதனை ஒரு பெருஞ்சிறப்பாக யான் கருதுகின் றேன். அவ்வுரிமையே இம்மஹாநாட்டை யான் திறந்துவைக்கும் வேலையை ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டலாயிற்று.

மேலேயுரைத்தவாறு முற்காலத்து வாழ்ந்த தமிழ்ப்பெரு மக்களுடைய ஆதரவைப்பெற்று இவ்வியற்றமிழ், அதன் எல்லா

அம்சங்களிலும் சிறந்து வளர்ந்து திகழ்ந்தது. இனி அதுபற்றிச் சிறிது ஆராய்வோம்.

மிகநீண்டகாலத்துக்குமுன்னரே நம்மனோர் எழுத்துக்களின் ஒலிவடிவங்களையறிதற்குரிய வரிவடிவங்களை அமைத்துக்கொண்டனரெனல்வேண்டும். எழுத்து என்னும் பெயர் எழுதப்படுதல் பற்றி வந்ததென்பர். மற்றும் முதலில் சித்திரவெழுத்துக்கள் தோன்றினவென்றும், அவற்றினின்று பின் பலவேறு வரிவடிவங்கள் தோன்றலாயினவென்றும், அச் சித்திரவெழுத்துக்கள் பழங்காலத்தில் இந்நாட்டிலிருந்தனவென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அன்றியும் நடுகல்லில் வீரம்மிக்கவனொருவனுடைய பெயரும் பெருமையும் எழுதும் வழக்கம் நம்நாட்டில் மிகவும் பழமைவாய்ந்ததென்றும் கூறுவர். எவ்வளவுகாலத்துக்குமுன்னரோ நம் முன்னோரால் இம்மொழி இந்நிலையடைந்திருக்கின்றது. எழுதுமளவிற்கு வாராதுநின்ற மொழிகளும் உளவன்றோ? மற்றும் எழுத்துக்களின் ஒலிவடிவினுடைய பல அம்சங்களும் ஆராய்ந்துரைக்கப்பட்டிருத்தலும், முற்காலத்தில் இயற்றமிழின் முதற்பகுதியான எழுத்தின்நிலையை நாமறிதற்குச் சிறந்த சான்றாகும். இக்காலத்தும் தமிழெழுத்துக்கள்பற்றிய ஆராய்ச்சி தமிழன்பாரது கவனத்தைப்பற்றியிருத்தல் குறிக்கத்தக்கதாகும்.

இரண்டாவது பகுதியாகிய சொல்லிலக்கணமும் நன்கு வளர்ச்சிபெற்றது. சொற்கள் வழக்கிலேந்து ஆக்கப்பட்டன. சொற்கள் ஆக்கப்படும் முறைகளும் வகுக்கப்பெற்றுள்ளன. புதிய சொற்களும் சொற்றொடர்களும் கண்டமைக்கப்பட்டன. அங்ஙனம் சொற்றொடரமைத்ததுபற்றி அச்சொற்றொடராலேயே பெயர் பெற்ற புலவரும் உளரென்பர்.

மற்றும் நம்முன்னோர் ஆரியத்திலிருந்து தமிழில்வந்து வழங்கும் சொற்களை வடசொற்களென்றும், பிறநிலத்திலிருந்துவந்து வழங்குவனவற்றைத் திசைச்சொற்களென்றும் வகுத்து இலக்கணமுரைத்திருக்கின்றனர் என்று அறிகின்றோம். இங்ஙனம் பிறமொழிச்சொற்கள் தமிழிற் புகுதலை அமைத்துக்கொண்டது,

அதனால் தமிழ்மொழிக்கு ஆக்கமுண்டாதல் கருதியாமென்றுணர லாம். அவை தமிழில் வந்து வழங்குமுறைமைகாட்டி யிலக்கணம் வகுத்திருப்பது, தமிழ்ப்பண்பழியாமற் பிறமொழிச்சொற்களை நம் மொழியிற்கொண்டு அதனைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கத்தைக் காட்டுகின்றது. இவையெல்லாம் முன்னர்வந்த சொற்களை அமைத்தவாறன்றிப் பின்னர் வருதற்குரியவற்றைத் தழுவுதற் கல்லவெனின், அதனை அறிஞர் பொருத்தமுடைத்தாகக் கருதா ரென்றெண்ணுகிறேன். இதனால் வேண்டுமிடத்து நாம் பிறமொழிச் சொற்களைக்கொண்டு நம்மொழிப்பண்பு கெடாதமைத்து அதனை வளம்படுத்திக்கொள்ளலாமென்றும் அதனால் அம்மொழிக்குக் குறைவில்லையென்றும் உணரலாம்.

இங்ஙனமே உயரியகருத்துக்கள் வேறிடத்துளவாயின் அவற் றை நம்மொழியிடைக் கொணர்தலும் அதனை வளம்படுத்துதற் குத் துணையாகும். இந்நெறியிற் பிறமொழிகளிடத்திலிருந்து நம் மொழி பெற்ற உயர்பொருள்கள் பலவென்பர். பிறமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவாகிய நூல்கள் நம்மொழியிற் பல உள் ளன. அவற்றால் நம்மொழி எத்துணை ஆக்கமடைந்துள்ளது! தமிழில் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு என நால்வகை நூல்யாப்புக்கள் (—நூல்களை ஆக்கும்நெறி) வகுக்கப் பட்டிருப்பதை அறிகிறோம். இவற்றுள் மொழிபெயர்ப்பு ஒன்றாக முன்னோர் வகுத்திருப்பது அவருடைய மொழிவளர்க்கும் நோக் கத்தை நன்குவிளக்குகின்றது. ஒருமொழி பிறமொழிகளின் உதவி யால் வளம்பெறுதலை விரும்பாதொழியின் அது பின்னணியில் நின்றொழியுமென்பதற்கையமில்லை. அதனால் நாம் பிறமொழிகளைக் கொண்டு நம்மொழிக்கு வரக்கூடிய ஆக்கத்தைத் தேடிக்கொள்ளு தல்வேண்டும். பிறமொழிகளிற் காணப்படும் அரியபெரிய நூற் பொருள்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படல்வேண்டும். இப்பணி மிகுதியாகப் பெருகுதல்வேண்டும்.

இன்னும் மிகவும் பழமையானகாலத்திலேயே நம் தமிழ் மொழி அரசியலும் அமைச்சியலும் இசையும் நாடகமும் கணித மும் நியாயமும் சிற்பமும் மருத்துவமும் சோதிடமும் முதலான

பலவேறுவகையான துறைகளிலும் பெருகியநூல்களையுடைய தாகத் திகழ்ந்ததென்பர். கலைதழுவியநூல்கள் பல இந்நாளிற் கிடைத்திலவேனும், அந்நாளில் இம்மொழி ஓராற்ருனும் குறை வின்றிநின்றதென்று கேட்கின்றேம். ஆனல் இந்நாளிற் காலத்திற் கேற்ற கலைநூல்கள் இம்மொழியிற் பெருகவில்லையென்பது மெய் யே. அக்குறை நமதுகுறையாவதல்லது நம்மொழியின் குறை யாகாது. ஆதலின் அக்குறை நீக்கவேண்டுவது நமதுகடமை யாகும். அக்குறைநோக்கி அதனை அறவே புறக்கணித்துவிடுவது அறிவுடைமைக்கேலாது. தமிழுக்குவரும் தாழ்வு தமிழர்க்குவரும் தாழ்வே. ஆதலாற் பிறமொழிகளிலுள்ள காலத்தாற்பெருகிய கலைச்செல்வங்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்தமைத்தல் வேண்டும். 'சென்றிடுவீரெட்டுத்திக்கும்—கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச்சேர்ப்பீர்'' எனத் தமிழன்னை தன்மக்களைநோக்கிப் பணிப்பதாகப் பாரதியார் பாடியிருப்பது இங்கு நினைக்கத்தகும். இன்னும் இதுகுறித்து விரித்துரைவழங்கல் வேண்டுவதின்றும்.

இயற்றமிழிலக்கணங்களுள் மூன்ருவது பொருளிலக்கணம். மொழியை ஆராய்ந்ததோடு அம்மொழி வழங்கும்பொருளையும் ஆராய்ந்து, அதனை அகம் புறம் என இரண்டாகவகுத்து, இன்பமும் அறமும் பொருளும் பிறவுமாகிய எல்லாப்பொருளும் அடங்க விரித்து இலக்கணம்உரைத்து வளம்பெற வைத்திருக்கும் இப் பொருளிலக்கணமுறை இத்தமிழ்மொழியிலேயே காணப்படுவ தென்பர். இன்னோரன்ன இலக்கணச்சிறப்புடைமையால் "இப் பசுந் தமிழ் ஏனை—மண்ணிடைச் சில இலக்கணவரம்பிலாமொழிபோல் —எண்ணிடைப்படக்கிடந்ததா எண்ணவும்படுமோ?" என்ற ஆன் ருேர்வாக்குச் சாலவும் பொருத்தமுடைத்தாகின்றது. தன்மக்க ளது ஆராய்ச்சிவன்மையால் இத்தகைய சிறப்பியல்களைப்பெற்று இம்மொழி திகழ்கின்றது. இப்பொருட்பகுதிபற்றிய இலக்கணங் களும் இலக்கியங்களும் பெருகியுள்ளன. இவ்விலக்கியங்கள் கற்பனைக்களஞ்சியங்கள் என்பர். கற்பனையாற் புதியநூல்களியற்று தற்கு இவை வழிகாட்டியாகவுள்ளன. புதியநூல்களியற்றுதல் நமக்குப் புதியதன்று. புதிதாகப் புனையப்படுவது 'விருந்து' என்று தொல்காப்பியமுதலியவற்றுட் சொல்லப்பட்டுள்ளது என்பர்.

இவ்வாறே யாப்பிலக்கணமும் பிறமொழிகளிலும் தமிழிற் சிறந்தமுறையில் வளர்ந்துவந்திருக்கின்றது என்றும், பற்பலபுலவர்கள் பற்பல செய்யுள்நெறிகளை ஆராய்ந்துகண்டு நூல்கள் இயற்றிச் செய்யுளிலக்கணத்தை வளப்படுத்தியிருக்கின்றனர்: என்றும் கூறுவர். இவ்விலக்கணங்களைக்கொண்டெழுந்த செய்யுட்களும் மிகப் பலவாம். தமிழ்ச்செய்யுட்கள் செவிக்கினிய இன்னோசையுடையனவாய் உள்ளங்கவர்தல் கண்கூடு.

இங்கு நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. தமிழில் வசனநூல்கள் மிகவும் குறைவாகவுள்ளனவாதலால் அவை பெருகுதற்கு முயலவேண்டுவது முறையே. ஆனால் அதுகாரணமாகச் செய்யுள் நூல்கள் பெருக்குதலை அறவே புறக்கணித்துவிடுதல் முறையாகாது. ஒன்று குறைவுற்றிருந்தால் அதனை நிறைவுறச்செய்வதே நியாயமாவதல்லது அதன்பொருட்டு நிறைவுற்றிருந்ததனைக் குறைவுறவிடுவது நியாயமாகுமோ? ஏதேனும் மாறுதல்வேண்டினால் ஒருகோடியிலிருந்து அதனை அறவேவிட்டு, மற்றொருகோடியைப் பற்றுதல் மக்களியல்பு. அவ்வியல்பாற் செய்யுட்கள் புறக்கணிக்கப்படுவனவாயின், செய்யுள்செய்யும் ஆற்றலை நம் தமிழர் இழந்துவிடுவர். இவ்வாற்றல் வேண்டும்போது ஒருவர் தம்மிஷ்டம்போல் உண்டாக்கிக்கொள்ளப்படுவதன்று; அது அடிப்பட்ட வாசனையால் உண்டாவது. ஆதலால் அதன் பயிற்சியை அகற்றிவிடுதலாகாது. அரும்பெரும்பொருள்களைச் சுருங்கியமுறையில் உள்ளத்தெழுதி வைத்துக்கொள்ளுதற்கேற்ப, இன்னோசையுடையசெய்யுட்களில் அமைத்துவைக்கும் நம் முன்னோர்நெறி நம்மாற் போற்றற்குரியதே. ஆதலாற் செய்யுள் பெருகுமாறும் அதற்கு ஆதரவுகாட்டுதல் வேண்டும்.

உரைநடை நமக்குப் புதிதன்று. தொன்றுதொட்டுவரும் பலவேறுவகையான நூலுரைகள் இவ்வுரைநடையுண்மைகாட்டும். உரையும் பாடலும் கலந்துவரும் நூல்கள் பண்டேயுள்ளனவென்பர். பாட்டுச் சிலவந்து உரைபெருகியனவும், பாவேயில்லாது உரையாகவந்தனவும், பொருளொடுபுணராப் பொய்ம்மொழியுள்ளனவும், பொருளொடுபுணர்ந்த நகைமொழியுள்ளனவும் என நால்வகை

யுரைநடையுண்டென்றும், "சிறுகுரீஇயுரை" என்பது பொய்ம் மொழியுள்ள பழமையானதொரு உரைநூல் என்றும், மற்றும் அத்தகைய கதைதழுவிய உரைநூல்கள் பழங்காலத்தில் உள வாதல்வேண்டுமென்றும் தமிழறிஞர் கூறுவர். இவற்றால் உரை நடையின் பழமையை உணரலாம்.

ஆயினும், உரைநடைநூல்கள் செய்யுள்நூல்கள்போல மிகுதி யாகத் தமிழிற் பெருகவில்லை. இக்காலத்தில் உரைநடைநூல்களே மிகுதியாக வேண்டப்படுகின்றன. அவை மொழிவளர்ச்சிக்கு மிகவும் அவசியமென உணரப்படுகின்றன. பொருள்களை எளிதி லுணர்தற்கும் உணர்ந்ததை அங்ஙனமே எளிதில் வெளியிடுவதற் கும் தாய்மொழிபோற் பிறமொழிகள் துணையாகா. அத்தாய் மொழியுள்ளும் உரைநடையே யாவர்க்கும் நன்கு பயன்படுவ தாகும். ஆதலால் யாவரும் தமிழொடுபழகித் தமிழால் தம்மறிவை வளர்த்துக்கொள்ளுதற்கேற்ப, யாவரும் உணரத்தக்கமுறையில் எளியநடையில் எழுதப்படும் உரைநடைநூல்கள் பலதுறைகளி லும் பெருகுதல்வேண்டும். ஆங்கிலமொழியின் உரைநூற்பெருக் கம் அறிஞர் நோக்கத்தக்கது.

இறுதியாகவுள்ள அணியிலக்கணமும் பலவகையான அணிக ளும் வகுத்துரைக்கப்பெற்று மற்றையிலக்கணங்கள்போலப் பெருகியுள்ளது.

இவ்வியற்றமிழிலக்கணங்களனைத்தையும் விரிக்கும்நூல்களும், சிலவற்றையே சிறப்பாக விரிக்கும்நூல்களுமாக, இலக்கணநூல் கள் பெருகியுள்ளனவென்பர். இவற்றோடு பல இலக்கியங்களும் கொண்டு பலபகுதிகளிலும் விரிந்துவிளங்குமாறு பண்டைத்தமிழ்ப் பெருமக்கள் பாடுபட்டிருக்கின்றனரென்பது மேலுரைத்தவாற்றால் அறியப்படும். அத் தமிழ்மக்களேயன்றியும், அந்நியநாட்டினருள் ளும் சிலர் இத் தமிழ்மொழிக்குப் பெரும்பணிசெய்திருக்கின்றனர். இத்தாலிநாட்டினரான வீரமாமுனிவர் (Constantine Joseph Beschi) தமிழிலக்கணங்களும் இலக்கியங்களும் இயற்றியிருப்பது தமிழறிஞர் அறிந்ததாகும். நம் தமிழ்மொழியிடத்து நன்மதிப்பும் நல்லார்வமுங்கொண்டு வெளிநாட்டோர் இதை வணக்கஞ்செய்யும்

வகையில் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துதவியது போன்ற அரிய பணிகளைச்செய்தும், பெரிய மதிப்புரையெழுதி இம் மொழியைச்சிறப்பித்தும்சென்ற மேனாட்டறிஞராகிய போப்பையரை நாம் மறத்தல் இயலாது. "திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ்செய்தல்வேண்டும்" என்பது பாரதியார் கூற்று. அங்ஙனம் நம்மொழியின்மேம்பாடு பலவும் வெளிநாட்டோர் அறிந்து அதை வணக்கஞ்செய்யுமாறுசெய்வதும் நமது கடமைகளுள் ஒன்றுமென்பது நாம் இங்கு உணரத்தகும்.

இங்ஙனம் செழித்தோங்கி நமது செல்வமாய்வந்த தமிழின் முன்னிருந்த பல அம்சங்களையும்போற்றி அழியாமற்பேணுவதோடு காலப்போக்கைய நுசரித்து இன்னும் முன்னேற்றமடைந்து, முன்னணியில் அது நிற்குமாறு செய்யும்பொறுப்பு நம்மிடத்துள்ளது. நம்மொழியின் ஆக்கமே நமது ஆக்கமாகும். ஆதலால் தமிழர்யாவரும் தம்மொழியைப் போற்றுவது தமதுகடமையாகக் கொள்ளல்வேண்டும்.

இவ்வியற்றமிழ்வளர்ச்சிக்குரிய பலவற்றையும் நாடுதற் பொருட்டே நாம் இங்குக் கூடியிருக்கிறோம். இத்தலத்தெழுந்தருளியுள்ள கண்ணுதற்பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து தமிழாராய்ந்ததாக ஆன்றோர் கூறுவர். அப்பெருமான் நமக்குத் துணையாய்நிற்பது நிச்சயமென்று எண்ணுகிறேன். இவ்வியற்றமிழ் யாவரும் மதிக்கும்வகையில் உன்னதநிலையையடைந்து மக்களது உள்ளத்திருளையொழித்தற்குரிய மொழிகளுள்ளே முதன்மைத்தாகநிற்குமாறு முயல்வதற்கானவற்றுள் யான் கருதிய ஒருசில இவ்வுரையில் மேலேயுரைக்கப்பட்டன. இன்னும் இவைபோன்ற நெறிகள் பலவும் இங்குவந்துள்ள அறிஞர் பலரால் இனி ஆராய்ந்துரைக்கப்படுமாறு, மிக்க உவகையோடு இப்பொழுது இம்மஹாநாட்டைத் திறந்துவைக்கின்றேன்.

# கம்பராமாயணசாரம்

[ராவ்ஸாகிப் ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

௩௯௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## விடைகொடுத்தபடலம்

திருமுடிசூட்டுவிழாவைத் தெரிசிக்கவந்திருந்தவர்களுக்கு இராமன் விடைகொடுத்தனுப்பியதைக் கூறுவது.

### இராமன் கோலுவிருத்தல்

அயோத்திவேந்தனான இராமன், இரத்தினங்களிழைத்த செம்பொற்சிவிகையிலே சீதையோடுவந்து, பூமிதேவியின் ஆபரணம்போலப் பொன்னாலும் மணியாலும் விளங்கிய கொலுமண்டபத்தை அடைந்து, (கண் வாய் உந்தி கை கால்களான) தாமரைகள்பூத்த மேகம் மின்னோடு வீற்றிருந்தாற்போலச் சிங்காதனத்திலே சீதையுடன் அமர்ந்தான்.

இராவணாதி இராக்கதரை வென்றதனால் உண்டான கீர்த்திச் சந்திரன்* சென்னிக்குமேலேநின்று திகழ்வதுபோல, வெண்கொற்றக்குடை விளங்க, இருபக்கமும் மங்கையர்நின்று வெண்கவரி வீச, மறையவர் வாழ்த்துக் கூற, மங்கலப்பாடகர் மங்கல கீதம் பாட, பல வாத்தியங்கள் முழங்க, எதிரே நர்த்தனமாதர் நடனமாடப் பெருந்திரளாகவந்து முடிமன்னர் அடிபடிய, வசிட்டனும் தம்பியரும் மந்திரிமாரும் சேனாதிபதிகளும் சூழ்ந்திருக்க, மாதர் பல்லாண்டு கூற, இராமன் கொலுவீற்றிருந்தான். அப்போது, வானரசைனியத்தோடு சுக்கிரீவனும், இராக்கதசேனையோடு விபீடணனும், வேடப்படையோடு குகனும் வந்து தொழுதார்கள். அவர்கள்பால் எல்லையில்லாது வளர்ந்த அன்பு அவர்களைத் தன் உள்ளத்தோடுள்ளமாக ஒன்றச்செய்துள்ள தன்மை

---

* கீர்த்தி வெண்ணிறமுடையதென்பது கவிமரபு.

யைத் தன் முகமலர்ச்சி காட்ட, (மானசமாக*) அவர்களை அழுந்தத் தழுவி மகிழ்ந்ததை வெளிப்படுத்துங் கண்கொண்டு அகமகிழ்ச்சியோடு அவர்களைநோக்கி, 'இங்கே இனிதிருங்கள்' என்றான்.† நன்னெறியறிவுமிக்க நீதிசாத்திரிகளும் நால்வேதம்வல்ல வேதவித்துக்களும் வாக்குவன்மையுடைய வாசாலகரும் புலமைச்செல்வம் மிக்க புலவரும் பலபல சாத்திரபண்டிதர்களும் சூழ்ந்திருந்தார்கள். இவ்வாறாக, எல்லாரும் மகிழ, நாள்தோறும் இராமன் கொலுவிருப்பானாக, இரண்டுமாதங்கள் இனிது கழிந்தன.

## இராமன் தானங்களும் கோடைகளும் பரிசுகளும் கொடுத்தல்

இராமன், வேதியருக்குச் சொன்னதானம் கோதானம் பூதான முதலிய தானங்கள்கொடுத்து, இரவலர்க்கு அவரவர் வேண்டுவன கொடுத்தான். பின்பு, அரசரை அழைத்து, மனமுவந்து, கருணையோடுநோக்கிப் பூமி சிவிகை மாலை மகுடம் ஆடை ஆபரணம் தேர் யானை குதிரைகளைப் பரிசாக வழங்கி விடைகொடுத்தனுப்பினான்.

## சுக்கிரீவனுக்கும் அங்கதனுக்கும் பரிசளித்தல்

பின்பு, இராமன், (இந்திரன்பகைவனான) சம்பராசுரனை வென்ற தசரதன் தன்னைப்பெற்றகாலத்தில் (அந்த) இந்திரன் கொடுத்த இரத்தினகடகத்தைச் சுக்கிரீவனுக்கும், இக்குவாகு மன்னனுக்குப் பிரமதேவன்கொடுத்த அங்கத‡மென்ற ஆபரணத்தை அங்கதனுக்கும் கொடுத்து, இருவருக்கும் ஆடை ஆபரணங்களும் ஆனை குதிரை தேர்களும் கொடுத்தான்.

---

* மானசம் - மானதம் - மனத்தாற்செய்வது.

† வள்ளலு மவர்க டம்மேல் வரம்பின்றி வளர்ந்த காதல்
உள்ளுறப் பிணித்த செய்கை யொளிமுகக் கமலங் காட்ட
அள்ளுறத் தழுவி னன்போன் றகமகிழ்ந் தினிதின் நோக்கி
'எள்ளவில் லாத மொய்ம்பீ ரீண்டினி திருத்திர்' என்றான்.

வள்ளல் - வரையாது (அளவின்றிக்) கொடுப்போன். வரம்பு - எல்லை. காதல் - அன்பு. பிணித்த - கட்டிய. அள் - செறிவு - நெருக்கம். எள்ளல் - இகழ்தல் - பழிப்பு. மொய்ம்பு - வலிமை. ஈண்டு - இங்கே.

‡ அங்கதம் - வாகுவலயம் - தோளணி.

அப்போது, இராமன் அங்கதனைநோக்கி, 'உனக்கொப்பு உன்னையன்றி வேறில்லை' யென்று புகழ்ந்து, நன்மதியும் வாழ்த்து மாக, 'உன் சிறியதந்தை சுக்கிரீவனோடு மனமொத்து மகிழ்ந்து வாழ்வாயாக' வென்று கூறினன்.

## அனுமானுக்குப் பரிசளித்தல்

பின், இராமன், அனுமானை அகமகிழ்ந்து அன்புகொண்டு நோக்கி, 'உதவிசெய்தலில் உன்னையொப்பார் உன்னையன்றி ஒருவரும் இலர். அந்நாளில், (இலங்கையில் இலக்குமணன் முதலிய எண்ணிறந்தோரைப் பலமுறையும், இந்நாளில் அயோத்தியில் தீப் பாய்ந்து செத்திடப்புகுந்த பரதனை ஒருமுறையும் சாவினின்று தப்புவித்து, நீ) செய்த பேருபகாரத்துக்கு நான் செய்யத்தக்க பிரதியுபகாரம் (என்னை நீ தழுவ உதவுவதன்றி) வேறொன்றுமில்லை. என்னை அழுத்தமாக ஆலிங்கனஞ்செய்துகொள்வாயாக, என்றான்.* இராமன் இவ்வாறு கூறவே, நாணித் தலைகுனிந்து வணங்கி, மரியாதையாக வாய்பொத்துதலும் முன்றானையை (வேட்டியின் தலைப்பை) ஒதுக்கிக்கொள்ளுதலும் செய்துநின்ற அனுமானை, இராமன், (தான் அனுமதியளித்தபடி அவன் தன்னைப் பணிவுடைமையும் மரியாதை

---

*மாருதி தன்னை யையன் மகிழ்ந்தினி தருளி நோக்கி
ஆருத விடுதற் கொத்தார் நீயலா லன்று செய்த
பேருத விக்கு யான்செய் செயல்பிறி தில்லைப் பைம்பூண்
போருத வியதின் டோளாய் பொருந்துறப் புல்லு கென்றான்.

மாருதி-அனுமான். ஐயன், இங்கே இராமனைக் குறித்தது. ஒத்தல்-தகுதியாதல் (தமிழ்ச்சொல்லகராதி). ஒத்தார் - தகுதியானவர். அலால் - அல்லால் - அல்லாமல். அன்று - முற்காலம். பைம்பூண் - பசும்பொன்னாற் செய்யப்பட்ட அணி (தமிழகராதி). போர் உதவிய-(இலங்கைப்)போரில் (எனக்கு) உதவிசெய்த. புல்லுதல் - தழுவுதல்.

போர் (க்களத்தில்) உதவிய, பைம்பூண் (அணிந்த) தோளாய் என இயையும்.

புடைமையும் காரணமாகத் தழுவாமையைநினைந்து, அதிகமதிப் பும் அன்பும் உடையவனாகி, அருட்கண்பார்வையால் ஆலிங்கனஞ் செய்வான்போன்று, உச்சிதொட்டு உள்ளங்கால்மட்டும்) பூரண மாகப் பார்த்து, ஆடை ஆபரணங்களும் ஆனை குதிரைகளும் வழங்கினான்.* (என் கையால் பரிசுபெற்றவர்களும் பெற இருக்கிற வர்களும்போலன்றி, இவன், உன் கையாலும் பரிசுபெறுதற்குரிய னென்ற குறிப்போடு) இராமன் கருணைநிறைந்த கண்கொண்டு சீதையை நோக்க, அவள், தன் நாயகன் குறிப்பறிந்து, சரசுவதி யால் அளிக்கப்பட்டிருந்த பருமுத்தமாலையைப் பரிசாக அனுமா னுக்கு அளித்தாள்.

### இராமன் ஏனைய வானரத்தலைவர்களுக்குப் பரிசளித்தல்

இராமன், சாம்பவான் நீலன் சதவலி கேசரி நளன் குமுதன் தாரன் பனசன் முதலிய வானரத்தலைவர்களுக்கு ஆடை ஆபரணங் களும் ஆனை குதிரைகளும் அளித்து, எழுபதுவெள்ளம் வானர சேனைக்கும் கவலையின்றி இனிது வாழும்படி கருணைநிறைந்த கடைக் கண்பார்வையளித்தான்.

### விபீடணனுக்குப் பரிசளித்தல்

இராமன், விபீடணனைநோக்கி, 'உன்னை ஒப்பவர் உன்னையன்றி ஒருவரும் இலர். (ஒருகால், எவரேனும் உன்னை ஒப்பார்) உளரேல்,

---

* என்றலும் வணங்கி, நாணி, வாய்புதைத் திலங்கு தானை
முன்றலை யொதுக்கி நின்ற மொய்ம்பனை முழுதும் நோக்கிப்
பொன்றிணி வயிரப் பைம்பூ ணாரமும் புனைபொன் றூசும்
வன்றிறற் கயமு மாவும் வழங்கினன் வயங்கு சீரான்.

இலங்குதல் - பிரகாசித்தல். தானை - ஆடை. முன்தலை - முகதலை - தலைப்பு. மொய்ம்பு - வலிமை. திணிதல் - செறிதல் - நெருங்குதல். பை - பசுமை - பொன்னிறம். பூண் - ஆபரணம். பைம்பூண் - பசும்பொன்னாற் செய்யப்பட்ட அணி. புனைதல் - அலங்கரித்தல். தூசு - ஆடை. வன் திறற் கயம் - மிக்க வலிமையுடைய யானை. மா - குதிரை. வழங்குதல் - கொடுத் தல். வயங்குதல் - விளங்குதல். சீர் - கீர்த்தி.

(அவர் ஒப்பு,) பசும்பொன்னை (-தங்கத்தை) க் கரும்பொன் (-இரும்பு) ஒக்குமாயினும் ஒப்பன்று'* என்றுகூறித் தேவர்கள் கொடுத்திருந்த இரத்தினகடகத்தோடு தேர் யானை குதிரைகளும் பொன்னுடை பொன்னாபரணங்களும் கொடுத்தான்.

## குகனுக்கு வெகுமதியளித்து விடைகொடுத்தல்

இராமன், சிருங்கிபேரநகரத்தரசனான குகனைநோக்கிக் 'குற்ற மற்ற தோழனான உனக்கு (நான், முகமனாக)ச் சொல்லவேண்டிய தொன்றுமில்லை' யென்றுசொல்லி, யானை குதிரைகளும் பொன் னும் ஆடையாபரணங்களும் வழங்கி அவனூர்க்குப்போக விடை கொடுத்தான்.

## அனுமன் முதலியோர்க்கு விடையளித்தல்

அனுமானையும் சுக்கிரீவனையும் அங்கதனையும் சாம்பவானையும் நோக்கி, இராமன், 'உங்களைப் "பிரிந்துசெல்க" என்று கூறுதல் (மனத்தால்) நினைவதற்குங்கூடாததாயிருக்கின்றது† (அதனை—,

---

* 'நின்னையே யொப்பார் நின்னை யலதில ருளரே லைய
பொன்னையே யிரும்பு நேரு மாயினும் பொருவன்' றென்றான்.

பொரு - ஒப்பு. உண்மையில் உன்னை ஒப்பார் இலர், தோற்றத்தில் ஒப்பார் உளரேல், அவருக்கும் உனக்கும் உள்ள வேறுபாடு, இரும்புக்கும் தங்கத்துக்குமுள்ள வேறுபாட்டினும் மிக்கதாமென்பது கருத்து.

† இவ்வாறு குகனுக்குக் கூறாதகாரணம் அவன் ஊர் அயோத்திக்குச் சமீபமானதாதலால், அவன் அடிக்கடிவந்து தன்னைக் காணக்கூடுமென்று இராமன் கருதியதென்னலாம். இதுகாரணமாகவே, அனுமனாதியர்பிரிவு பற்றி வருந்துவதாகக்கூறிய இராமன், குகன்பிரிவுபற்றிவருந்தியதாகக் கூறவில்லைபோலும். முன், வனவாச ஆரம்பத்திற் குகனைப் பிரிந்து நெடுந் தூரம்செல்லநேர்ந்தபோது, இப்போது நெடுந்தூரம் பிரிந்துசெல்லும் சுக்கிரீவாதியர்க்குச் சொல்லியதுபோல,

'அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் கியாருள ருரைசெய்வாய்
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யிதுகாவென் னேவலி னினி'தென்றான்.

என்று (கங்கைப்படலம்-எக-ல்) கூறியிருப்பதைக் காண்க. உம்பி - உன்தம்பி (பரதன்.)

பிரிந்துசெல்க என்பதை—எவ்வாறு வாயாற் கூறுதல் முடியும்! நீங்கள் என்னை எக்காலத்தும் பிரியாதிருப்பதே எனக்குப் பிரியமானது. ஆயினும், நீங்கள் இங்கேயிருந்தால், உங்கள் நாடுகள் காவலிழந்தனவாய்விடும். இந்த நாட்டை நான் காக்கின்றேன்.) உங்கள் இருப்பிடங்களும் என்னுடைய நாடுகளே. அந்த நாடுகளைக் காத்தற்கு (என்னைப் பிரிந்துபோவது உங்களுக்கு வருத்தமாயிருக்குமாயினும்,) என் ஏவலால் ஏகுங்கள்' என்றான்.*

### விபீடணனுக்கும் விடைகோடுக்க, எல்லாரும் அவரவரூர்க்குப் புறப்பட்டுப்போய்ச்சேர்தல்

விபீடணனுக்கும், மேலே அநுமனாதியர்க்குச் சொல்லியவாறு, பிரிவாற்றாமையையும் பிரிவின் அவசியத்தையும் கூறி, இலங்கைக்கேகும்படி விடைகொடுத்தான். எல்லாரும் இராமனைப் பிரிய மனமில்லாதவராயினும், அவன் ஏவியவாறுசெய்தல் தம் கடமையென்றுகருதிப் பிரியச் சம்மதித்து, வசிட்டனையும் தாயர் மூவரையும் இராமசீதையரையும், தம்பியர் மூவரையும் வலங்கொண்டு வணங்கி, விடைகொண்டு, தங்கள் தங்கள் ஊர்க்குப் புறப்பட்டார்கள். விபீடணன், எல்லாரோடும் புட்பகவிமானத்திலேறிச் சென்று, குகனையும் அவன் பரிவாரத்தையும் சிருங்கிபேரநகரிலும், சுக்கிரீவாதியரைக் கிட்கிந்தாநகரத்திலும் விடுத்து, இலங்கையை அடைந்தான். ]

---

* அனுமனை வாலிசேயைச் சாம்பனை யருக்கன் றந்த
கனைகழற் காலினனைக் கருணையங் கடலு நோக்கி
'நினைவதற் கரிது நும்மைப் பிரிகென்ற னீவிர் வைப்பும்
எனதது காவற் கென்ற னேவலி னேகும்' என்றான்.

வாலிசேய் - அங்கதன். சேய் - மகன். அருக்கன் (-சூரியன்) தந்த (பெற்ற) கனை (-ஒலிக்கின்ற) கழல் (-வீரக்கழலுடைய) காலினன் - காலையுடையவன் - சுக்கிரீவன். கருணை அம் கடல் - கருணைசமுத்திரம் (ஆன இராமன்). 'பிரிகென்றல்', 'பிரிக என்றல்' என்பதன் விகாரம். நீவிர் வைப்பு - உங்கள் இடம். 'எனதது' என்பதில் 'அது', பகுதிப்பொருள் விகுதி. 'வைப்பும்' 'எனதும்' சாதியொருமையாய் 'வைப்புக்கள்' 'என்னவை' யென்ற பொருள்களுடையனவாய் உள்ளன.

205 ஐயனு மவரை நீக்கி யருள்செறி[1] துணைவ ரோடும்
வையக முழுதுஞ் செங்கோன் மனு[2]நெறி முறையிற் செல்லச்
செய்யமா மகளு[3] மற்றைச்[4] செகதல மகளுஞ் சற்றும்[5]
நையுமா றின்றிக் காத்தா னனிலப்[6] பொறைக டீர்த்தே.

கொண்டுகூட்டு: இராமன், அவரைநீக்கி, அருள்செறிதுணைவரோடு மனுநெறிமுறையில் வையகம்முழுதும் செங்கோல்செல்லச் செய்யமாமகளும் மற்றைச் செகதலமகளும் சற்றும் நையுமாறு இன்றி, நானிலப்பொறைகள் தீர்த்துக் காத்தான்.

பொருள்: இராமன், குக சுக்கிரீவ விபீடணாதி நண்பர்களை விடைகொடுத்தனுப்பித் (தான் அரசுபுரிய உதவிசெய்பவரான) தம்பிமாரோடு, மனுதருமமுறை தவறுதலின்றிப் பூமிமுழுதும் செங்கோல் செல்ல, (பூலோக அரசாட்சியின் அதிதேவதைகளான) பூதேவியும் சீதேவியும் சிறிதும் வருந்தாமல், பூமியிலுள்ளார்களுடைய (வறுமை முதலிய) சுமைகளைநீக்கி அரசாண்டான்.

ஐயன் - அரசன் (தமிழ்ச்சொல்லகராதி) - இங்கே, இராமன். அருள் - தொடர்புபற்றுது இயல்பாக உயிர்கள்மேற்செல்லும் கருணை (வள் - அதி. உரு) தமிழ்ச்சொல்லகராதி. செறிதல் - மிகுதல் (தமிழகராதி). துணைவர் - சகோதரர்; உதவிசெய்வோர். துணைவரென்பது, இங்கே, பரத லக்குமண சத்துருக்கர், இயற்கையாகச் சகோதரராயிருத்தலையும் செயற்கையாக அரசுபுரிதற்கு உதவிசெய்பவராயிருத்தலையும் ஒருங்கே உணர்த்துவதாகக்கொள்ளல் பொருந்தும். வையகம் - பூமி. சீதேவி (இலக்குமி)க்குச் சிவந்தநிறமுடையவளென்ற பொருளுடைய 'செய்யவள்', 'செய்யா' ளென்ற பெயர்களும் 'மா' என்ற பெயரும் இருத்தல்பற்றி, இலக்குமியைச் 'செய்யமாமக' ளென்றார். செகம், தலம், செகதலம் என்பவை பூமியின் *பரியாய நாமங்கள். சற்றும் - சிறிதும். நைதல் - தளர்தல்; வருந்தல். காத்தல் - அரசாளுதல் (தமிழ்ச்சொல்லகராதி). நானிலம் - நால் நிலம் - (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகைப்பட்ட நிலமுடையது) - பூமி (தமிழகராதி). பொறை - பாரம் - சுமை. தீர்த்தல் - நீக்குதல். ஐயனும் என்பதில் உம்மை இசைநிறை. தீர்த்தே என்பதில் ஏ, இசைநிறையும் ஈற்றசையுமாம்.

* பரியாய நாமம் - ஒருபொருட்பல்பெயர்.

பரதன்முதலிய தம்பியர் அரசுபுரிதற்கு உதவியாயிருத்தற்குத் தகுதியுடையாரென்பார், "அருள்சேறிதுணைவர்' என்றாரென்று கொள்ளலாம்; இவ்வாறுகொண்டால், 'அருள்செறி துணைவர்' என்றது, 'அபிப்பிராயத்தோடுகூடிய விசேடணமுடையதாகிய அலங்காரம்' என்ற கருத்துடையடையணிக்கு ஓர் உதாரணமாகும்.

"துணைவரோடும் வையகம்............காத்தான்" என்று கூறும் இந்தப் பாட்டுக்கு அடுத்த "இம்பரோடு" என்ற பாட்டில் "தம்பியரோடுந் தானுந் தருமமும் தரணிகாத்தான்" என்று கூறியதைக் 'கூறியதுகூற'லாகக் கொள்ளாமல், 'அநுவாத'*மாகக் கொள்க. இங்கே, நிமித்தம், அரசாட்சிக்குத் தம்பியர்துணையோடு தருமத்தின் துணையுங்கொள்ளலாம்.

பாடபேதம்: [1]அடிதொழு, அடிசெறி. [2]மறை. [3]மகளை. [4]மற்ற. [5]மற்றும். [6]நானிலம்.

---

விடைகோடுத்தபடலம் முற்றிற்று.

---

யுத்தகாண்டம் முற்றிற்று.

---

## கம்பராமாயணசாரம் முற்றுப்பேற்றது.

---

* அநுவாதம் - முன்னர்க் கூறிய ஒருபொருளை யொருநிமித்தத்தாற் பின்னும் எடுத்துக்கூறுதல் (தமிழ்ச்சொல்லகராதி).

உ

# விஞ்ஞான வளர்ச்சி*

[ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.]

வாமனவடிவம் எடுத்த திருமால் உலகனைத்திலும் வியாபித்ததை வருணிக்கும் கம்பர், "உயர்ந்தவர்க்கு உதவிய உதவியை ஒப்ப" அவர் ஓங்கி வளர்ந்தார் என்று கூறுகிறார். சிறிது காலத்துக்குமுன்வரை குறுகிக்கிடந்த விஞ்ஞானம் இப்போது இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொருதுறையிலும் புகுந்து இவ்வுலகத்துக்கு அப்பாலுள்ளவிஷயங்களிலும் வியாபித்திருப்பதை வருணிப்பதற்கும் இந்த உவமை நன்கு பொருந்தும்.

இக்காலத்திலே கிட்டத்தட்ட முப்பத்தாறாயிரம் விஞ்ஞானப் பத்திரிகைகள் புதிதுபுதிதான விஞ்ஞானவிஷயங்களை வெளியிட்டு வருகின்றன. சிறந்த அறிவாளிகளுங்கூட இவ்விஷயங்களையெல்லாம் நன்கு தெரிந்துகொள்ளமுடியாமல் திணறுகிறார்கள். சாமானியர்களாகிய நம்முடையபாடோ கேட்கவேண்டியதில்லை: பரிதாபத்துக்கு இடமாகத்தான் அது இருந்துவருகிறது. சுவையற எழுதிய வறட்டு ஆராய்ச்சிநூல்களையும், தினசரிப் பத்திரிகைகளின் விசேஷ அநுபந்தங்களையும், கற்பனைத்திறம்மிகுந்த நிருபர்களின் ரஸமான கட்டுரைகளையும், இவைபோன்ற பிறவற்றையும் அறைகுறையாகப் படித்துத் தெரிந்துகொள்ள முயலுகிறோம். சீராகத் தெரிந்துகொள்ளமுடியாமல் திண்டாடுகிறோம்.

ஒவ்வொருநாட்டிலும் சிலகாலமாக விஞ்ஞானத்தில் மிகவும் தீவிரமான கருத்து உண்டாயிருக்கிறது. சில விஞ்ஞானிகள் விஞ்ஞானத்துறைகளில் ஆராய்ச்சிசெய்து, அறிவைப் பெருக்குவதையே

---

* சென்னை அகில இந்திய ரேடியோநிலையத்திலிருந்து 11–8–1942-ல் ஒலிபரப்பப்பட்டது. அதிகாரிகளின் அனுமதிபெற்றுப் பிரசுரிக்கப்பட்டது.

தமது முழு லக்ஷியமாகக்கொண்டு, ஆராய்ச்சிகளில் தமது வாழ் நாள் முழுவதையும் கழித்துவருகிறார்கள். செல்வம், பதவி, அதிகாரம், வாழ்க்கைச்சௌகரியங்கள் முதலிய சுயநலங்களை யெல்லாம் இவர்கள் பெரிதாக எண்ணுவதில்லை. சிறிய அளவுள்ள தாயும் நாற்றங்கள் வீசுவதாயுமுள்ள சோதனைச்சாலையையே இவர்கள் மிகப் பரந்த இன்ப உலகமாக மதித்துவருகிறார்கள். ஆராய்ச்சிகளால் இவ்வாறு திரண்டு குவியும் அறிவை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையே வேறு சில விஞ்ஞானிகள் தம் முடைய லக்ஷியமாகக்கொண்டு உழைத்துவருகிறார்கள். இருவித விஞ்ஞானிகளின் முயற்சியாலும் பல்லாயிரக்கணக்கான நூதன விஷயங்கள் ஆராயப்பட்டும், கண்டுபிடிக்கப்பட்டும், இயற்றப் பட்டும் வருகின்றன.

மனிதவாழ்க்கைக்கு இன்றியமையா உணவுப்பொருள்களை யும், மனிதர் வாழும் இடங்களையும், மக்களின் ஆடைகளையும், அவர்களுக்குரிய போக்குவரவு சாதனங்களையும், விவசாயம் வியா பாரம் சிற்பம் முதலிய தொழில்களையும், சுகாதாரம் வைத்தியம் முதலியவற்றையும் நவீன அறிவைக்கொண்டு சீர்திருத்தி அமைத்துவருகிறார்கள். புதிதுபுதிதாக இயற்றப்பட்டுவரும் கருவிகள் நமது கண்ணின்பார்வையைப் பல்லாயிரம் மடங்கு பெருக்குகின்றன: நமது காதுக்குக் கேளா ஒலிகளைக் கேட்கச் செய்கின்றன: நாம் சுவைத்தறியாப் புதுச்சுவைகளை இயற்றித் தருகின்றன: நாம் தொட்டறிய இயலாப் புதுப்பொருள்களை நமக்குப் புலனாக்குகின்றன. இவ்வண்ணமாய் விஞ்ஞானத்துறை களில் தோன்றிவரும் புதிய வளர்ச்சிகளைப் பற்றி விவரமாகச் சொல்லுவதற்கு ஒரு வாழ்நாள் போதாது. நூதனமாகக் கண்டு பிடித்த சிற்சில விஷயங்களையும், சமீபத்தில் இயற்றிய சில பொருள் களையும், கருவிகளையும், சிற்சில நவீன ஆராய்ச்சியின் பயன் களையும், நோக்கங்களையும் குறிப்பிடுவதே இப்பொழுது இயலுவதாகும்.

பிரபஞ்சத்தின் அளவை நோக்கும்போது நாம் வாழும் உலகம் ஒரு துகளளவேயாகும் என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்தப் பிரபஞ்சம் என்பது என்ன அளவுள்ளது? அது பிறந்தது எப்பொழுது? அது அழிந்துவிடுமா? அதனுள்ளே அடங்கியிருக்கும் உலகங்கள் எத்தனை? என்னும் கேள்விகள் நம்மைத் திகைக்கச்செய்கின்றன. ஆனால் அறிவால் துணிந்த விஞ்ஞானிகள் இக் கேள்விகளுக்கு விடையளிக்க முயலுகிறார்கள். நூறு அங்குலம் குறுக்களவுள்ள கண்ணாடியையுடைய மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கருவிகளை இயற்றி வானவெளியை ஆராய்ந்து நக்ஷத்திரங்களையும், தூமபடலங்களையும் கண்டுபிடித்தார்கள். இவை வீசும் ஒளிகளைப் பன்னிறப் பட்டையை அளக்கும் ஸ்பெக்ட்ரஸ்கோப் முதலிய கருவிகளால் சோதித்தார்கள். இவ்வித ஆராய்ச்சிகளால் நக்ஷத்திரங்களின் கதிகளைக் கணக்கிட்டார்கள். இவற்றோடு கணிதநூலறிவையும் பொருத்திக் கணக்கிட்டுப் பிரபஞ்சத்தின் எல்லையைக் காணமுயன்றார்கள்.

சிலகாலத்துக்குமுன் ஹப்பிள் என்னும் ஒருவர் பிரபஞ்சமானது வரையறையுள்ளது, ஆனால் எல்லையற்றது என்றும், ஸெகண்டுக்கு லக்ஷத்து எண்பத்தாறாயிரம் மைல் வீதம் ஓடும் ஒளியானது அதைச் சுற்றிவர இருபதினாயிரங்கோடிவருஷம் ஆகும் என்றும், அதனுள்ளே கோடானுகோடி தூமபடலங்கள் சிதறிக்கிடக்கின்றன என்றும், ஒவ்வொரு தூமபடலத்திலும் பத்துக்கோடி சூரியன்கள் அடங்கியிருக்கக்கூடுமென்றும் சொன்னார். இந்த மதிப்பு அதிகப்படியானது என்று சிலரும் குறைவானது என்று சிலரும் ஆக்ஷேபிக்கிறார்கள். பிரபஞ்சமானது ஒரே அளவுள்ளதன்று; நாளுக்கு நாள் அது விரிவடைந்துகொண்டே வருகிறது என்கிறார்கள் சிலர். இன்னும் பெரிய தூரதிருஷ்டிக்கருவியை இயற்றுவோம்; அவற்றைக்கொண்டு மேன்மேலும் வானத்தை அளப்போம் என்று விஞ்ஞானிகள் கங்கணம் கட்டுகிறார்கள். சிலகாலத்துக்குமுன் இவர்கள் இயற்றிய கருவியின் (கண்ணாடியின்) குறுக்களவு இருநூறு அடி.

திறந்த ஜன்னலின் ஊடாக ஒளி செல்லும். அதனால் புக இயலாத கண்ணாடிக்கதவை ஒளிக்கிரணங்கள் ஊடுருவிச் செல்லும். ஒளியும் புகஇயலாத மரத்தையும் இரும்பையும் எக்ஸ்ரேகிரணங்கள் ஊடுருவிச்செல்லும். சக்திவாய்ந்த இக்கிரணங்களையும் தடுக்க வல்ல ஈயத்தையும் காஸ்மிக் கிரணங்கள் எளிதில் ஊடுருவிச்செல்லும். வானவெளியிலே எட்டாப்புறத்தினின்று இவை பரவுகின்றன என்பது மட்டிலும் இப்போது தெரியப்பட்டுள்ளது. ஆதலால் இவற்றை நாம் பகிரண்டக் கிரணங்கள் என்று சொல்லலாம். இவை தோன்றுமிடம் எங்கே உள்ளது? இவை தோன்றக் காரணம் என்ன? ஆழ்ந்த சுரங்கங்களின் அடியிலும், மலைச்சிகரங்களின் உச்சியிலும், நெருப்பைப்போல் சூரியன் காயும் உஷ்ணப் பிரதேசத்திலும், உறைபனி என்றும் மூடியுள்ள துருவங்களிலும், தொண்ணூறுயிரம்அடி உயரப்பறக்கவிட்ட பலூன்களிலும், மிகவும் ஆழமாயுள்ள கடல்களின் அடியிலும், மலைச்சுனைகளிலும், இவ்வகைக் கிரணங்களைச் சோதித்துவருகிறார்கள். மின்காட்டி, மேக-அறை, கைகர்-எண்ணளவி முதலிய கருவிகளைக்கொண்டு இவற்றை ஆராய்ந்தும்வருகிறார்கள். இக்கிரணங்களின்தன்மை தெரிந்தால், எக்ஸ்ரேகிரணங்களை ஆராய்ச்சி கைத்தொழில் வைத்தியம் சிற்பம் ஓவியம் முதலிய பல துறைகளிலும் பயன்படுத்துவது போலவே, இவற்றையும் இத்துறைகளிலெல்லாம் பயன்படுத்தலாம் என்பது சிலருடைய லக்ஷியம். மனிதன் வளர்வதும் வளர வளர அவனுடைய உடலுறுப்புக்கள் தளர்ந்துபோவதும் இக்கிரணங்களின் செயல்களாயிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். இவற்றின் தன்மைகளை முழுவதும் அறிந்துகொண்டால் மூப்பையும் சாக்காட்டையுமே ஒழித்துவிடலாம் என்பது சில விஞ்ஞானிகளின் கனவு.

வேறு சிலர் அணுக்களையும் அவற்றினும் நுண்ணிய எலெக்ட்ரான், புரோட்டான், ந்யூட்ரான், பாஸிட்ரான், மீஸோட்ரான்

முதலியவற்றையும் பிரித்து ஆராய்ந்துவருகிறார்கள். இவர்கள் இயற்றிய சைக்ளோட்ரானும் மேக-அறையும் மனிதனுடைய நுண்ணறிவுக்கும் கைத்திறனுக்கும் மிகச் சிறந்த சான்றுகளாக உள்ளன. ஸர் ஸி. வி. ராமன் பொருளின் அமைப்பைப்பற்றிச் செய்துவரும் ஆராய்ச்சிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

மாட்டைப் பல்லைப்பிடித்துப் பார்த்து அதன் வயதை நிர்ணயிக்கமுடியும். மரத்தின் தண்டில் தோன்றும் வளையங்களைக் கொண்டு அதன் வயதை நிச்சயிக்க முடியும். இதைப்போலவே பாறைகளில் தோன்றும் பட்டைகளைக்கொண்டும் பூமியின் வயதை நிர்ணயிக்கமுயலுகிறார்கள். ரேடியச் சிதைவு முதலியவற்றாலும் பூமியின் வயது மதிக்கப்படுகிறது. டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் முதலியோர் இவற்றைப்பற்றிச் சிலமுடிவுகள் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் சிலர் விஞ்ஞானஅறிவைப் பயன்படுத்தி இயற்கையிற் காணும் அற்புதத்தோற்றங்களை ஆராய்ந்துவருகிறார்கள். பனிநாடுகளிலுள்ள எரிமலைகள், ஐஸ்லாந்திற் காணும் வெந்நீரூற்றுக்கள், காலிபோர்னியாவில் காணும் அற்புதக்குழிவுகள், பாறைகளில் பதிந்துள்ள பண்டைப்பிராணிகள், கடலின் ஏற்றவற்றங்கள், சமுத்திரத்திலுள்ள நீரோட்டங்கள் முதலியவற்றைப் பலர் ஆராய்ந்து நமக்குப் பயன் அளிக்க முயன்றுவருகிறார்கள்.

வேறொருதுறையைச் சிறிது கவனிப்போம். "பாக்டீரியா" எனப்படும் நுண்ணுயிர்கள் நோய்களை விளைவிக்கும் வித்துக்களாக உள்ளன என்று பாஸ்டியர் கண்டுபிடித்தகாலம்முதற்கொண்டே அவற்றுள் தீங்குசெய்யும்வகைகளைத் தொலைப்பதற்கான வழிகளை அறிஞர் தேடலாயினர். கார்பாலிக் ஆஸிட் என்னும் திராவகம் இத்தகைய சக்திவாய்ந்தது என்பதைக் கண்டுபிடித்தார்கள். பாக்டீரியாவால் நோயுற்ற ஒருவனைக் கார்பாலிக் ஆஸிட் என்னும் திராவகத்தில் அமிழ்த்தி ஊறவைத்தால் அவனுடைய உடலிற் புகுந்து அவனுக்கு நோய்விளைத்த நோய்வித்துக்கள் யாவும்

அழிந்துபோகும். ஆனால் அந்தத் திராவகமானது அவனது உடலி லுள்ள பிறஉறுப்புக்களையும் பாதிக்குமாதலால் அந்நோய்வித்துக்க ளோடு அம்மனிதனும் இறந்துபோவான். ஆதலால் அறிஞர்கள் நோய்வித்துக்களைமட்டிலும் அழிக்கவல்லதும், உடலிழைகளுக் கும், உடற்கண்ணறைகளுக்கும் அதிகம் தீங்குசெய்யாததுமான மருந்தைத் தேடத்தொடங்கி ஓரளவில் பயன்பெற்றுவந்தார்கள்.

ஜெர்மனியில் ஒருவனுக்கு ஏதாவது நல்ல உத்தியோகம் வேண்டுமானல் குறைந்தபக்ஷம் அவன் டாக்டர்ப் பட்டமாவது பெற்றிருக்கவேண்டும். டாக்டர்ப்பட்டம் பெறுவதற்கு ஏதாவ தோர் ஆராய்ச்சியை நிகழ்த்தி அதைப்பற்றிய கட்டுரை ஒன்றும் எழுதியாகவேண்டும். 1906-ஆம் வருஷத்தில் டாக்டர்ப் பட்டம் பெற எண்ணிய கேல்மோ என்பவர் நிலக்கரிக் கீலெண்ணெயி லிருந்து நூதனமான இரசாயனப்பொருள் ஒன்றை இயற்றினர். அதைப்பற்றி எழுதிய கட்டுரையில் பாரா-அமீனே-பென்ஸீன்-ஸல்போ-ஆமைட் என்று அதைக் குறிப்பிட்டார். நிறமும் பெயரழ கும் அற்ற இப்பொருளை எவ்வாறாகிலும் பயன்படுத்தமுடியுமா என்று பலர் முயன்றுபார்த்தார்கள். கெல்மோவுக்கு டாக்டர்ப் பட்டம் வாங்கிக்கொடுத்ததையும், சாயத்தொழிலிற் சாயச்சரக்கைக் கெட்டிச்சாயமாகத் துணிகளிற் படியச்செய்வதற்கு ஓரளவு உதவு வதையும் தவிர வேறெந்தப்பயனும் இந்தச்சரக்குக்கு இருப்பதாகத் தெரியவில்லை. வெகுகாலமாக இந்தச்சரக்கு மதிப்பாரற்றுக்கிடந் தது. இதை இயற்றிய கெல்மோ போன இடமே தெரியவில்லை.

இதன்பின்னர் இருபதுவருஷம் கழித்து டாக்டர் டோமாஷ்க் என்பவர் சிற்சில பாக்டீரியாவை அழிக்கும் திறமை இந்தச் சரக் குக்கு இருப்பதாகக் கண்டுபிடித்தார். அவருடைய ஆராய்ச்சி உலகுக்கு மிக்க பயன் அளிப்பதாயிருந்தபடியால் அவருக்கு நோபெல் பரிசு கிடைத்தது. இந்தச் சரக்கின் குணம் தெரிந்தபின்,

இதைப் பெரும்பாலும் ஒத்த பல இரசாயனச் சரக்குகளை இயற்றினார்கள். அவற்றுள் சில பலவகை நோய்களைத் தடுக்கவல்ல மருந்துகளாக இருக்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றிலும் ஹைட்ரஜன், கார்பன், நைட்ரஜன், ஆக்ஸிஜன், ஸல்பர் என்னும் ஐந்து மூலப்பொருள்கள் காணப்படினும், இவ்வைந்தும் வெவ்வேறு வகையாய்ப் பொருந்துவதால் வெவ்வேறு பொருள்களாக அமைகின்றன. இவ்வாறு அமைத்த ஸல்பா-அனில்-ஆமைட், ஸல்பா-பிரிடீன், ஸல்பா-தையஸோல், ஸல்பா-டையஸீன், ஸல்பா-க்வானிடீன், ஸல்பா-பிரஸீன் எனப்படும் ஆறு மருந்துகளும் புண்களை ஆற்றுவதற்கும், சீக்கோக்காமல் தடுப்பதற்கும், நுரையீரல் நோயைக் குணப்படுத்துவதற்கும், இன்னும் இவைபோன்ற சிகிச்சைகளிலும் திறம் அறிந்த வைத்தியர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. யமதூதர்களின் அதிகாரம் வரவரக் குறைந்துவருகிறது.

நோய்வாய்ப்பட்டுப் பலவீனமாகி ஊசலாடும் உயிரையுடைய உடலில் சிற்சிலவேளைகளில் மற்றொருவனுடைய இரத்தத்தைப் புகுத்திப் பலம் அளிக்கிறார்கள். புது இரத்தத்திலுள்ள கார்ப்பஸில்கள், கப்பற்படை துணைக்குச்செல்வதுபோல், நோயாளியின் இரத்தத்திலுள்ள கார்ப்பஸில்களின் துணைக்குச்சென்று நோய் வித்துக்களோடு போராடி வெற்றியடைய முயலுகின்றன. மனிதருடைய இரத்தம் நால்வகைப்பட்டதென்றும், ஒத்த இரத்தமே உதவிசெய்யும் என்றும், ஒவ்வாத இரத்தத்தைப் புகுத்தினால் இறந்துபோவான் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இன்னும் எக்ஸ்ரே கிரணங்கள், ஒலிக்கருவிகள், மின்சாரக் கருவிகள் முதலியவற்றால் நோயை அறியும் புதியமுறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எக்ஸ்ரேகிரணங்களாலும், ரேடியத்தினாலும், சைக்ளோட்ரான் என்னும் கருவியினால் வீசியெறியப்படும் மிகமிக நுண்ணிய அணுக்குக்களாலும் க்ஷயரோகம், கான்ஸர் முதலிய நோய்களுக்குச் சிகிச்சைசெய்ய முயன்றுவருகிறார்கள்.

டைபாய்டுஜ்ஜுரம், வாதஜ்ஜுரம், வைசூரி, இன்புளூவென்ஸா, க்ஷயம், மூளைநோய்கள் முதலியவற்றை நிச்சயமாய்க் குணப்படுத்தும் மருந்துகள் இன்றளவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆதலால், அல்ட்ரா-சென்ட்ரிப்யூக் என்னும் சுழல்கருவி, மிகமிக நுண்ணிய பொருள்களையும் தோற்றுவிக்கும் அல்ட்ரா—மைக்ரஸ்கோப், உடலில் பத்து அங்குல கனமுள்ள தசையையும் ஊடுருவிச் சென்று தோற்றச்செய்வனவாயும் உடலிழைகளை அழிக்கும் மிகமிக நுண்ணிய செல்களைத் தனியாகப் பிரித்துக் காட்டுவனவாயும் உள்ள சிறந்த கருவிகள், பலவகைக் கிரணங்கள், பலவகை இரசாயனப்பொருள்கள் முதலியவற்றை இயற்றி அவற்றால் இந்நோய்களின் தன்மைகளை ஆராய்ந்து இவற்றைக் குணப்படுத்த வல்ல சிகிச்சைமுறைகளை அறிய முயன்றுவருகிறார்கள்.

மனிதர் மனிதரோடு போராடி உயிர்க்கொலைசெய்துவந்த போதிலும், என்றென்றும் நமக்குப் பெரும்பகையாயுள்ளது பூச்சியினமே. ஒவ்வொரு வருஷமும் கொசுவும், மூட்டைப்பூச்சியும், உண்ணியும், ஈயும், வெட்டுக்கிளியும் நோய்விளைத்தும், பயிரைத் தின்றும் நமக்கு அளவிலாத்தீங்கை விளைவித்துவருகின்றன. இப்பூச்சிகளை ஆராய்ந்து அவற்றுள் ஒன்றோடொன்றைப் போராடவிட்டும், அவற்றைத் தக்க மருந்துகளால் தாக்கியும் அழிப்பதற்குரிய முறைகளை விஞ்ஞானிகள் கையாண்டு பயனடைந்து வருகிறார்கள்.

வேறுசிலர் பரம்பரையாக இறங்கிவரும் பண்புகளையும், அமைப்புக்களையும், செயற்கைமுறைகளால் மாற்றமுயன்று ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். எக்ஸ்ரே கிரணங்களாலும், ஊதாவின் வெளிப்புறக் கிரணங்களாலும், உயிர்வித்தைத் தாக்கினால் அதனுள்ளே சிற்சில மாறுபாடுகள் உண்டாகின்றன, அவற்றால் சந்ததியின் பண்பும் அமைப்பும் மாறுபடுகின்றன, என்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நாம் நினைத்தபடியெல்லாம் மனிதருடைய நிறத்தையும், அங்க அமைப்புக்களையும், உடலின்

பரிமாணத்தையும், அறிவையும், குணத்தையுமே மாற்றமுடியுமா என்றும், நாம் விரும்பியபடி சந்ததியை ஆணுகவோ பெண்ணுகவோ இருக்கச்செய்யலாமா என்றும் ஆராய்ந்து வருகிருர்கள்.

இன்னும் சிலர் விஞ்ஞானஅறிவைப் பயன்படுத்தித் தாவர வகைகளின் வளர்ச்சி முதலியவற்றை ஆராய்கிருர்கள். முற்காலத்திலே அங்கங்கே ஒருவர் இருவர் தனித்தனியாக முயன்றபடியால் அதிக வெற்றி கிடைக்கவில்லை. இப்பொழுதோ இரசாயனம், பௌதிகம், ஜீவதத்துவம் முதலிய துறைகளில் கிடைத்துள்ள அறிவையும் தாவர ஆராய்ச்சியினர் பயன்படுத்துவதாலும் பற்பல சோதனைச்சாலைகளில் உழைப்பவர்கள் தாங்கள் அறிந்தவற்றைப் பிறர் அறிய அவ்வப்போது வெளிப்படுத்திவருவதாலும் ஆராய்ச்சியின் வேகம் மிகுதிப்பட்டுவருகிறது. தாவரங்களுக்கும் உயிர்ப் பிராணிகளுக்கும் மிக நெருங்கிய பிணைப்பு இருப்பது மேன்மேலும் உணரப்பட்டுவருகிறது.

மனித உடலிலே ஹார்மோன்கள் என்று பெயரிடப்பட்ட சில இராசயனப்பொருள்கள் இருக்கின்றன. இவற்றை இரசாயன தூதர்கள் என்று சொல்லலாம். இவை உடலில் ஓரிடத்தில் இயற்றப்படினும் வேருேர் இடத்திற்குச் சென்று அங்கேயுள்ள உறுப்புக்களின் வளர்ச்சியை அடக்கியாளுகின்றன. இத்தகைய இரசாயன தூதர்கள் செடிகளின் உடலிலேயும் இருக்கின்றன. இவற்றை நாம் வைட்டமின்கள் என்று சொல்லுகிருேம். தர்மசிந்தனை யாதுமின்றித் தம் நலமே கருதித் தாவரங்கள் இயற்றிவரும் ஹார்மோன்களாகிய வைட்டமின்கள் நம்முடைய உடலின் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதவைகளாக இருக்கின்றன. இவற்றின் தன்மைகளை மேன்மேலும் உணர்ந்துகொண்டால் செடிகளை நம்மிஷ்டம் போலெல்லாம் வளரச்செய்யலாம், வேர்விடச்செய்யலாம், தழைக்கச்செய்யலாம், பூக்கச்செய்யலாம், காய்க்கவோ காயாமலிருக்கவோ செய்யலாம், நமது உடல்நலத்துக்கு வேண்டிய வைட்டமின்களையும் போதிய அளவு எளிதில் இயற்றிக்கொள்ளலாம்.

யுத்தத்திலேதான் விஞ்ஞானம் எத்தனைவகையாய்ப் பயன்படுகிறது! வானத்தின் முகட்டைத் தொடுவதுபோல் உயரப்பறக்கும் குண்டுபொழியும் விமானமும், மணிக்கு நானூறுமைல்வீதம் பறந்து அதை வேட்டையாடிச் சுட்டுவீழ்த்தும் விமானமும், எதிரிவிமானத்தின் வரவை அறிவிக்கும் ரேடியோவும், கீழிருந்தே அதைத் தாக்கும் பீரங்கியும்; நீர்மூழ்கிக்கப்பலும், அதன் கருவியான டார்பிடோவும், அதை அழிக்கும் நாசகாரிக்கப்பலும், நீருள் வெடிக்கும் வெடியும்; காந்தவெடியும், அதை விலக்கும் ஏற்பாடும்; விஷவாயுவும், அதைப் பயனற்றுப்போகச்செய்யும் முகமூடியும் மருந்துகளும்; டாங்கும், அதைத் தகர்த்தெறியும் துப்பாக்கியும்; யுத்தக்கப்பலும், ஆசுபத்திரிக்கப்பலும்; இன்னும் இவைபோன்ற பிறவும்; அழிப்பனவும் காப்பனவும் ஆன நூற்றுக்கணக்கான கருவிகள் விஞ்ஞானஅறிவை மக்கள் வெவ்வேறுவகையாய்ப் பயன்படுத்தியதால் உண்டாகிய முரண்படும் விளைவுகள்.

இவ்வுலகத்திலே பகை ஒழிந்து சமாதானமும் அன்பும் நிலவும் காலத்திலே விஞ்ஞானஅறிவை மக்கள் தமது சமூகத்தின் நன்மை ஒன்றையே கருதிப் பயன்படுத்தமுயலுவார்கள். சூரியகிரணங்களிலிருந்தும், கடலின் ஏற்றவற்றங்களிலிருந்தும் சக்தியைஇயற்றுவார்கள். உலகெங்கும் செல்வம் பல்லாயிரமடங்கு பெருகிச் செழிக்கும். நோய்களின் கொடுமை ஒடுங்கும், மூப்புக் குறையும், சாக்காடு தடைப்படும். இவ்வுலகம் இன்பமயமான பொன்னுலகமாக மாறிவிடும்.

---

ஸ்ரீ:

# இராமசெயம்*

[இராமாயணத்திருப்புகழ்]

## உத்தரகாதை

(சக0-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஓடி யோடி யுடனி ளேக்கும்
நாடி நாடி நினைவு பற்றும்
ஓதி யோதி நனிச விக்கும் அழும்வீழும்
ஊடு சேரு முணர்வை விட்டு
மோக மீறு துயின்ம றக்கும்
ஊறு நேச மொருவ ருக்கும் உரையாது
வாடி வாடி மறுகி மிக்க
கோயில் கோயி லெனவு ரைக்கு
மாத வாய வெனவ ழைக்கும் அரிராமா
வாழி வாழி யெனவி சைக்கும்
நீடு காதன் மகளி ரொத்து
மாவி னேடென் மனமு ழைப்ப துணராதோ
நாடு வாழ வரச ளித்து
வாழு நாளி லொருபொ ழிற்குள்
நாளு மேவி மிதிலை யிற்பெ ணவளோடு
நாம நீரின் மூழ்கி மிக்க
மாலை சூடி மணியி லுற்று
நா.........லாத மதன சித்ர வநுராக

---

* இது, இச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிலுள்ள ஒரே ஏட்டுப் பிரதியிற்கண்டவாறு வெளியிடப்படுகிறது. ஏட்டில் இடையிடையே சிதைந்த பகுதி இங்கே புள்ளியிட்டுக்காட்டப்பெற்றுளது.

வீடு லாவு கலவி முற்றி
மாது சீதை முலைக னப்ப
வீறில் மேனி யதுவி ளர்ப்ப வயிரூடே

யேடு லாவு புனித கெர்ப்ப
மான போத மகிழ்வு பற்றி
யேது வேணு மெனவு ரைத்த பெருமாளே. (46)

போதுவை மீள்வை சேர்வை நாடு
லோசன மீது க்ராண நேர்வை
பூரண ஞான மாக நீடு மனமீதே

போதவு லாவி வாழ்வை சூழ்வை
நீள்வெளி யாவை ரூப மாவை
பூசிய வாசம் வீச நேச வுறவாகி

யாதர வாகி நீல மேக
மேனிய தாகி யூடு சேர்பொ
னுடைய தாகி மார்பு மாதும் உளனாகி

யார்வளை யாழி பாணி யாகி
மாமுடி சூடி மூர லேகொ
டானுவை பாவி வேறு போக வசமாமோ

'மாதவர் காடு மேவி நீடு
தோழிய ரோடு கூடி யாடி
மானவ மீள வேணும் வாழி' யெனவோது

மாமல ராளை நீடு சேடர்
தேர்மிசை போக மேவி ஞான
வான்மிகர் சாலை யூடு தேவி தனியாகத்

தூதர்க ளோதும் லோக நீதி
பேணிவி டாது மூவ ரோடு
தூநிரு தேச ராடன் மேவு நிமிராசன்

சூழ்கதை கூறி ஞால மேழும்
மாமனு நூலி னுளும் ராம
தோல்வியி லாத கோயின் மேவு பெருமாளே. (47)

தோடேறு நாறு துளவ தாம
மாருத மார்பு சதுர மான
தோளார மான மகுட தாரை வளையாழி
தோலாத நீடு கதைவி டாத
மாகோல கால கனக வாடை
சூழ்பாத வான நதிவி சால விழியாடற்
கோடேச மான கிரிவ பார
வாரீச நாபி யுடைய மேன்மை
கூர்மேக ரூப வடிவை நாடி யிருபோது
கோணாது பாடி யுருகி யாடி
வீணாள்கொ டாது பயிலு மாறு
கோளாறு கூடு மினிய ஞான மருள்வாயே
நாடோறு நாடி முறைசெ யாது
கேடான ராச கதைகள் கூறி
நாடாளு ......... மதுகு மார லவணேச
னுலாறு க்ரீவர் ...............
.........ள்பி ராண னனைய சூநு
நாணாத பூண ருதவு சூல முடையோனு
வீடேறு வேள்வி குலைய வாடி
யூடேத ளாடி வெருவி னேமெம்
யாகாதி யோம மழியொ ணாது னருள்வேணும்
ஈசாவெ னுநன் முனிவர் கூற
மாசேட னுர்பி னவனை யேவும்
ராமாபி ராம பரவு தேவர் பெருமாளே. (48)

ஏறுத சொற்கள் சொற்றிட லயலவர்
கூறுன வற்றை நத்துத னிலையற
ஈராசை யுற்று மட்குதல் கயவரொ டுறவாடல்
ஏறுவ றத்தி னுற்றிட லவையிடை
தோலாவ ழுக்கி னைக்கெட முடுகுதல்
யாரோடும் வெட்டை தட்டிய வகைசெயன் மனமீரம்

ஊருதி ருத்தல் பொற்ருெடி மகளிர்சொல்
கேளாந டத்த னட்பிடை பிழையுற
வோடாவொ ளித்தல் கைக்குள திலேயென லுனேநாளும்

ஓதாது நிற்ற லித்திற முதலிய
வேழேழ்பி றப்பு மற்றிட வெகுவித
லோகாதி தத்தை விட்டிட வுயர்பதம் அருள்வாயே

மாருது மிக்க பத்தியின் விடைகொடு
நீள்கோச லத்தை விட்டுயர் பகிரதி
வானீர்கு ளித்து மக்கரை மருவியு நெடிதேகி

வான்மீகர் மெய்த்த வப்பளி யதனிடை
சிதேவி பெற்ற வுத்தம குசலவர்
மாரூப லட்ச ணத்தையு மிரவிடை நனிகேளா

வேருண மைக்குள் வெட்கினன் யமுனேயை
நாளேழி லுற்று நற்றவர் கதைசொல
மேனுண்ம னுக்கு லத்திறை ......... தனேமோது

மேலோனே திர்த்து முட்டி.........விடு
சூலாயு தத்தி லுற்றது தெளிவுறும்
வீருன சத்து ருக்கினர் முதல்வரு பெருமாளே. (49)

அதுவெனத் துதித்திட லிதுவென
லுதுவெனக் கிளத்துத லிவையென
லவையெனப் பயிற்றுத லுவையென லவரோடே

யவனெனப் பரப்புத லிவனென
லுவனெனக் குயிற்றுத லிவளென
லவளென......திட லுவளெனல் பினேநீநான்

முதலுரைத் திடத்தகு பெயர்வகை
யடையவுற் றுநிற்பது முனதுரு
மொழியனேத் திளுட்பொரு......... ளதனுலுன்

முறைமையைப் புலப்பட வறிவுற
லொருவருக் குநிச்சய மரிததின்
முழுதுமித் தலத்துனே யறிகுவ தடியேனே

மதுநகர்ப் புறத்தினில் விரைவொடு
படையெடுத் தாக்கரு மவுணரும்
வகைபடத் தனிச்சிலை கொடுபொரு தவனேவும்
மலைமரத் தினைப்பொடி செய்துதெச
...........................முடுகியோர்
வடிசரத் தினைக்கொடு லவணனை யுயிர்வாரி
எதிரறத் திரு...............நகரிடை
யறுவகைக் கிரட்டிய வருடமு
மெழில்பெறச் செலுத்திய திகிரியொ டுலகாளா
இனையபொற் படைத்திர ளதனொடு
பழநகர்க் குள...............கிய
இளையசத் துருக்கினர் பரவிய பெருமாளே. (50)

அரவெடுத் துவெறறிமத
கரிமறித் து நட்டகழை
யதனி னுச்சி யிற்பவுரி நடமாடி
யணியகற்றி நிற்கடுகு
நடைபயிற்றி மெய்க்காண
மவையியற்றி மெத் துதிரை கடலோடி
யிரவுபட்ட சத்தியமு
முழுதுரைத்து யிர்க்கிறுதி
யிடர்விளைத்த வத்தமுறு பொருள்தேடும்
இதயதுக்கம் விட்டுனது
முழுதுமுற்று னற்பொருளை
யெளிமையிற் றகத்தினொடு தெளிவேனோ
பரவுசத்து ருக்கினனை
யுடனெடுத்த ணைத்தெனது
பகையாக்க ரைப்பொருது துயிலாதான்
பழுதறுத்தி யற்றுதவி
யளவிலைச்ச டைப்புனிதர்
படையெடுத்து டற்றுவய லவணேசன்

விரவுமப்ப திக்கணுகி
யவனையுற்ற டர்த்துலகில்
வினையறுத்து விட்டனையி தமையாதோ
விரைவினத்த லத்தரச
நெறியினிற்பு ரத்தியென
விடைகொடுத்த மெய்ப்பெரிய பெருமாளே. (51)

[தொடரும்.]

T. K. இராமானுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

---

# அநுதாபக்குறிப்பு

---

நிகழும் சித்திரபானுஸு ஆடிமீ 27உ (11—8—42) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ம-ா-ாஸ்ரீ M. தினகரபஹதூரவர்கள், இராமநாதபுரத்தில் தமதரண்மனையில் மார்படைப்புநோயினால் தேகவியோகமெய்தியதறிந்து மிக்க துயருறுகிறோம். இவர் சேதுவேந்தர்குடிப்பிறந்து அக்குடிக்கியல்பாயமைந்த செந்தமிழறிவுடன் ஆங்கிலமொழித்தேர்ச்சியும் உடையராயிருந்தவர்; பெருவள்ளலாய்த்திகழ்ந்த பாற்கரஸேதுபதியவர்களுடன் பிறந்தவர்; இடையே சில ஆண்டுகள் இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரிய நிர்வாகஸபைத்தலைவராயிருந்து தமிழ்ப்பணிபுரிந்தவர். இவரைப் பிரிந்துவருந்தும் இவர் சுற்றத்தார்க்கும் நண்பருக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திராசிரியர்.

---

# மதிப்புரை

வீரசோழியம்:—இது, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் ஒருங்குகூறும் பழந்தமிழ் நூலாகும். இதனை இயற்றின ஆசிரியர் புத்தமித்திரனார் என்று பெயர்கூறப்படுவர். கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் விளங்கின வீர ராஜேந்திரன் என்னும் சோழவரசன்பெயரால் இந்நூல் வீரசோழியம் எனப் பெயர்பெற்றதென்பர்.

வடமொழி தென்மொழிகளுக்குள்ள தொடர்பு கடைப் பிடித்து இதன்கண் இலக்கணம் வகுக்கப்படுகின்றது. எனவே அம்மொழிகளின் ஒப்பிலக்கணவாராய்ச்சிக்கு இது சிறந்த கருவி நூலாக அமையவல்லதாம். பிற்காலத்தே தோன்றின பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து என்பவற்றிற்கும் முன்னமே அவ்வழியில் அடிகோலின தனிச்சிறப்பு இந்நூலுக்கு உரியதா கின்றது. அன்றியும், பிற தனித்தமிழிலக்கணங்களிற் காண வியலாத எத்துணையோபல அரியசொற்பொருண்முடிபுகள் இதனால் அறியக்கிடக்கின்றன. 'திகடசக்கர' என்னும் திரிபுச்செய்யுட் டொடர்க்குப்புணர்ச்சிவிதி இந்நூலினின்றே அருமையாகக்காட்டப் பெற்றதென்று ஆன்றோர் கூறுவர். இவற்றால் இந்நூல் பயில் வார்க்கு இருமொழிப்புலமையும் நிரம்புமென்பது சொல்லாமலே விளங்கும்.

இந்நூலுக்கு நல்லுரைகண்டார் பெருந்தேவனார் என்னும் புலவர் பெருமானவர். இவருரையில் எத்துணையோ பல பழந்தமிழ்ப் பனுவல்கள் மேற்கோளாக எடுத்தாளப்படுகின்றன. மற்றும் இவ் வுரையின் அருமைபெருமைகளெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும்.

இத்தகைய அரிய தமிழ்நூலின் மூலமும் உரையும் யாழ்ப் பாணம் திரு. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் முன்னரே

இருமுறை பதிக்கப்பெற்றன. ஆயினும், அவை இப்பொழுது எல்லார்க்கும் கிடைத்தில. ஆகையால், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி உயர்கலாசாலையின் மாஜி தலைமைத்தமிழாசிரியர் திரு. கா. ர. கோவிந்தராஜமுதலியாரவர்கள் பல பிரதிகள்கொண்டு பரிசோதித்துப் புதியமுறையிற் செவ்வனம் இதனை அச்சிட்டு உதவியுள்ளார்கள். இப்பதிப்பாசிரியரவர்களின் நன்முயற்சி அவர்களுக்குப் புகழ்வளர்ப்பதோடு தமிழ்மக்களுக்குப் புலமைவளர்த்துப் பெரிதும் போற்றுந்தரத்த தென்பதில் ஐயமில்லை. அவர்கள் எழுதிய குறிப்புரையும் அடிக்குறிப்புக்களும் அரிதாய உழைப்பின் பயனை எல்லார்க்கும் எளிதாக எய்துவிக்கின்றன. முதலியாரவர்கள் இதுபோன்ற தமிழ்ப்பணிகள் இன்னும் பல இயற்றி நெடுங்காலம் வாழ்க. இது நிற்க,

இப்புத்தகம், சென்னை வேப்பேரிப் பவானந்தர்கழகப் பதிப்பாக வெளிவந்துள்ளது. இக்கழகம், தமிழின்பணியையே தம் வாழ்வின் அணியெனக்கொண்டு பல அருந்தமிழ்நூல்களை அச்சிட்டுதவின திவான்பகதூர் திரு. ச. பவாநந்தம்பிள்ளை I.S.O., O.B.E., F. R. H. S., M. R, A. S. அவர்களால் தாம் ஈட்டிய நன்பொருள் கொண்டு நிறுவப்பெற்றதாகும். அவர்கள் காலஞ்சென்றபின்னர், அக்கழகத்தின் தருமபரிபாலகர்கள் அத்தமிழறம் சிறிதும் தளரா வண்ணம் தாங்கிவருகிறார்கள். அம்முறையில் வீரசோழிய மூலமும் உரையுமாகிய இப்புத்தகவெளியீடும் ஒன்றாகவிளங்குகின்றது. இவ்வெளியீடு சீர்திருத்தம்பெற்றுச் சிறத்தற்குவேண்டும் பொருட்செலவனைத்தும் போற்றாதுவழங்கப்பட்டுள்ளது. இத்தமிழறக் கழகமும் இதன் தருமபரிபாலகரும் என்றென்றும் நிலவுமாறு இறைவன் திருவருள்புரிக. இப்புத்தகத்தின் விலை ரூபா. 3. கிடைக்குமிடம்:—பவானந்தர்கழகம், வேப்பேரி, சென்னை.

பௌதிகநூல் (இரண்டாம்புத்தகம்):— இஃது, ஆர். கே. விசுவநாதன் எம்.ஏ., வி. என். இராமஸாமி பி.எஸ்.ஸி., இவர்களால் எழுதப் பட்டது. இன்டர்மீடியேட்வகுப்புக்குப் பாடபுத்தகமாகத்தக்கது. அண்ணுமலைசர்வகலாசாலையாரால் பதிப்பிக்கப்பெற்றது.

சிறந்தமுறையிற் பௌதிகநூலினைத் தமிழில் இயற்றுபவர்களுக்கு ஆயிரரூபாய் பரிசுவழங்க அண்ணுமலை பல்கலைக்கழகத்தார் முன்னர் இசைந்திருந்தனர். இந்நூலே அப்போட்டியில் வென்று பரிசுபெற்று விளங்கியதென்று தெரிகிறது. அன்றியும், அக்கழகத்துப் பௌதிகசாத்திரப் பேராசிரியர் டாக்டர் எஸ். இராமச்சந்திரராவ் அவர்கள் எழுதியுள்ள முகவுரையும் இந்நூலின் பெருமதிப்புக்குச் சான்றுபகர்கின்றது.

இஃது ஒளியியல் ஒலியியல் என்னும் இரு பெரும்பிரிவுகளாக அமைந்துள்ளது. இதனுள் அமைந்த அத்தியாயச்சுருக்கம் சொல்லகராதி வினுவிடைகள் ஆகிய பகுதிகளோடு ஆங்காங்குள்ள இன்றியமையாத விளக்கப்படங்களும் சேர்ந்து மாணவர்களுக்கு உறுதுணையாய் உதவவல்லன. பௌதிகநுட்பங்களைப் புதுமொழியிற் புகுத்தியுரைக்குங்கால் எத்துணையோ இடர்ப்பாடு தோன்றல் இயல்பாம். ஆயினும், அவை பெரிதும் இடம்பெருவாறு இப்புத்தகவெளியீடு நல்லமுறைதழுவிச் செல்லுவதென்று தெளிவாய் விளங்குகிறது. எனவே, முதன்மையாக இந்நூலினை ஆக்கியளித்த ஆசிரியர்களின் அறிவாற்றல்கள் போற்றிப்புகழுந்தரத்தன என்பதிற் றடையில்லை.

அன்றியும், இவ்வளவு நல்லுதவிக்கும் காரணமாய்நின்று, இத்தகைய கலைப்புத்தகங்களுக்குப் பரிசளிப்பதோடமையாது, அவற்றைப் பதிப்பித்து வெளிப்படுத்திப் பலரும் பயனுறச்செய்துவரும் அண்ணுமலை பல்கலைக்கழகத்தார்க்குத் தமிழுலகியற்றும் கைம்மாறு சொல்லளவில் அடங்குவதன்று. வேண்டுவோர் அண்ணுமலை பல்கலைக்கழகத்திற் பெறலாம்.

காரைக்காலம்மையார்திருமுறை:—காரைக்காலம்மையார் முற்காலத்தில் முதன்மைபெற்ற சிவனடியாராகத் திகழ்ந்தவர். அப்பெரியார் பக்திச்சுவை பழுக்கப் பாடியருளின தெய்வத் தமிழ்ப்பிரபந்தங்கள் சிலவுள. அவை மூத்ததிருப்பதிகம், திருவிரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி என்பனவாம். அவற்றின் தொகுதியே இங்குக் காரைக்காலம்மையார்திருமுறை என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது.

இத் தெய்வத் திருமுறையின் அருமைபெருமைகள் அளவிடலரியன. இதனைத் தனியே தொகுத்துத் திருவையாற்று அரசர்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. R வேங்கடாசலம்பிள்ளையவர்களால் உரையும் இயற்றுவித்து அச்சிற்பதித்த உபகாரசீலர், கோனூர் ஜமீந்தார், நச்சாந்துப்பட்டி, திரு. பெ. ராம. ராம. சித. சிதம்பரஞ் செட்டியாரவர்களாவர். அவர், தம் அருமையன்னையாரின் நினைவு வெளியீடாக இதனைத் தமிழுலகுக்கு அளித்துள்ளாரென்று தெரிகிறது.

இப்புத்தகம் தக்கவர்களைக்கொண்டு மிகத் திருத்தமுற அச்சிடப்பெற்றதாம். மஹாமஹோபாத்தியாய, பண்டிதமணி, திரு. மு. கதிரேசன்செட்டியாரவர்கள் இதற்கு அரியதொரு முகவுரையெழுதிப் பாராட்டியுள்ளார்கள்.

இத் திருமுறைப்பதிப்பாளரின் தந்தையாரான திருப்பணிச்செல்வர் திரு. பெ. ராம. இராமநாதன்செட்டியாரும், அன்னையாரான இல்லறச்செல்வி சாத்தம்மையாச்சியாரும் ஆகிய இவ்விருவருடைய உருவப்படமும் இப்புத்தகமுகப்பில் அழகுசெய்கின்றன. 'நல்லாரைக் காண்பதுவுநன்றே' என்பது ஆன்றோர்வாக்கன்றோ?

இங்ஙனம் தந்தைதாயரைப் பேணுந்தகவோடு தமிழறம் புரக்கும் சால்பினையும் மேற்கொண்டு பதிப்பாளர் திரு. சிதம்பரஞ் செட்டியாரவர்கள் அன்பர்களுக்கு இப்புத்தகத்தை விலையின்றி வழங்க விரும்பியுள்ளார்கள். இந் நல்லுதவிக்குத் தமிழுலகு இயற்றும் கைம்மாறு யாதுளது?

தமிழன்:—இது, இம்மதுரைநகரினின்று புத்தகவுருவில் வார வெளியீடாகவரும் புதியதொரு தமிழ்ப்பத்திரிகை. திரு. சி. பா. ஆதித்தன் எம். ஏ. பார்-அட்-லா அவர்கள் இதன் பதிப்பாசிரியராவர். கண்ணைக்கவரும் சித்திரப்படங்களோடு இஃது அழகாக அச்சிடப் பட்டு விளங்குகிறது.

இதில் அரசியல்விஷயங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்படுகின்றன. மற்றும் பொது அறிவு வளர்ச்சிக்கான பல வகைப்பட்ட பொருளும் இதில் சிறிதுசிறிது விவரிக்கப்படுவன வாம். புராணக்கதை, இலக்கியம், பெரியாரின் வாழ்க்கைச்சம்பவம், உண்மைவரலாறு, கலையுலகம், சினிமாக்குறிப்பு, விகடத்துணுக்கு, பாலர்பகுதி எனப் பலவேறுகட்டுரைகள் படிப்பவர்க்கு எளிய இனிய பொழுதுபோக்காகுமாறு இதில் வரையப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சிலவரையறையோடு கட்டுரையெழுதவல்லவர்களுக் குச் சிறந்த பரிசளிக்கும் போட்டித்திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

ஒன்றோடொன்று ஒவ்வாத பல்வேறுவகையான கோட்பாடு கள் மலிந்து பரவிவரும் இக்காலத்தில், இப்பத்திரிகையையும் தமிழ் நாடு விரும்பி ஏற்றுக்கொள்வதிற் சந்தேகமில்லை. தமிழ்ப்பெரியார் பலர் இதற்கு ஆசிமொழிந்து, நல்வரவுகூறி, ஆதரவளிக்கின்றனர். ஆக்கமோ அழிவோ என்று அறியமுடியாதநிலைமையில் தமிழ்மக்க ளிடையே புதுநாகரிகமோகத்தைப் புகுத்திவிடாமல், நல்லறி வூட்டி, ஒற்றுமைவளர்த்து, உயரியவாழ்க்கைக்கு உண்மைவழி காட்டி, அவர்தம் பண்டைப்பெருமையை நிலைநிறுத்தவேண்டு மென்று நாமும் நம் நல்ல தமிழனுக்கு நன்றிகூறுவோமாக.

இப்பத்திரிகையின் வருடச்சந்தா ரூ 6. ஆறுமாதச்சந்தா ரூ 3-8-0. தனிப்பிரதி விலை அணு 2. கிடைக்குமிடம்:—தமிழன் காரியாலயம், மதுரை.

---

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் விஷு ௵ பங்குனி மீ 24, 25, 26 (1942-ம் ௵ ஏப்ரல் மீ 6, 7, 8)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறி யோக்கியதாபத்திரம் பெறும் மாணுக்கர்களின் அபிதானபத்திரம்.

## பண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

| தொடர் எண். | பதிவு எண். | |
|---|---|---|
| 1 | 27 | R. கந்தசாமி, ஆசிரியர், துன்னுலை வடக்கு, கரவெட்டி, Ceylon. |
| 2 | 8 | செ. வேலுப்பிள்ளை, பரமேசுவர பண்டிதாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon. |
| 3 | 26 | க. கனகரத்தினம், ஷை ஷை |
| 4 | 17 | க. மயில்வாகனம், ஷை ஷை |
| 5 | 15 | கா. நமசிவாயம், ஷை ஷை |
| 6 | 2 | நா. லக்ஷ்மணன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை, |
| 7 | 28 | க. வேலுப்பிள்ளை, உபாத்தியாயர், கல்வயல், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், Ceylon. |
| 8 | 12 | இ. இராசலிங்கம், பரமேசுவர பண்டிதாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon. |
| 9 | 9 | க. சிவகடாட்சம்பிள்ளை, ஷை ஷை |

## பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 47 | S. மகாதேவன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 2 | 58 | த. இராஜேசுவரி (பெண்), செட்டித்தெரு, வண்ணூர் பண்ணை-மேற்கு, யாழ்ப்பாணம், Ceylon. |

## பிரவேசபரீக்ஷை.

2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 60 | R. சுப்பிரமணியன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |

மதுரைத்தமிழ்ச்சங்கம், 16—7—'42.

*R. Shanmuga Rajeswaran,*
அக்கிராசனாதிபதி.

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | *அகப்பொருள்விளக்கம் ... ... ... | | | |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் ... ... ... | | | |
| 51. | *மதங்கசூளாமணி ... ... ... | | | |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 66. | சந்திரகுப்தன் ... ... ... | 0 | 6 | 0 |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“செந்தமிழ்”ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்,

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.